155

உ

கணபதிதுணை.

வித்யாபாநு.

" கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக "—திருக்குறள்.

தொகுதி10	காலயுக்தி௵ வைகாசி௴	பகுதி 5.
Vol-X	June 1918.	No 5.

ஸ்ரீ:

கட்டாயக்கல்வி.

" உறுபசியும் ஓவாப் பிணியுஞ் செறுபகையுஞ்
சேரா தியல்வது நாடு " திருக்குறள்.

ஒரு நாடானது, அதிக புத்திநுட்பமுடையவர்களும் ஊக்கமுடைய உழவர்களும், மிக்கவிளைவும் பசியின்மையும், திருப்தியும், ஆரோக்யமும் அரசின்வன்மையும், அமைச்சர் உறுதியும், நிலத்தின் படையும் அடலியரணுமாகிய இவற்றை நன்குபெற்று, நாடாக வேண்டுமெனின், சமுதாயக்கல்வியில் தேர்ச்சிபெற்றிருக்கவேண்டும். கல்வித்தேர்ச்சிக்குத் தேசத்துச்சிறுவர் கட்டாயமாகவேனும் பயிற்றப்படல்வேண்டும். இந்தக்கட்டாயம் அரசாங்கத்தாராலேனும் தேசப்பொதுஜனங்களாலேனும் பிறப்பிக்கப்பட முயலல்வேண்டும்.

இவ்விதமாகத் தேசக்ஷேமத்தைக் கோரிக் கட்டாயப் படிப்பின் ஆவசியகத்தைக் கடைப்பிடித்துள்ள ஒவ்வொருவரும், காலஞ்சென்ற ஸ்ரீமான் கோபாலகிருஷ்ணகோகுலர் அவர்களது, 1910-ம் வருஷத்து ஆரம்பப்படிப்புத்தீர்மானத்தையும் 1911-ம் வருஷத்து ஆரம்பப் படிப்புத்தீர்மானத்தையும் நன்கு படிக்கவேண்டும். அதனது தெளிந்த ஸாரம் பின்வரும்.

‘தேசத்தில் எங்கும் ஆரம்பப்படிப்பை இலவசமாகவும் கட்டாயமாகவும் ஏற்படுத்தும்படியான ஆரம்பத்தை இந்தஸபை நிஷ்கரிஷிக்கிறது; அதற்காக வேண்டிய நிச்சயமான அபிப்பிராயங்களைத் தெரிவிக்கும்பொருட்டு, கூடிய விரைவில், உத்யோகப்பற்றுள்ளவர், உத்யோகப் பற்றில்லாதவர் ஆகிய இரு திறத்தாரும்கூடிய கூட்டமொன்றைச் சேர்த்துவைக்கவும் நிஷ்கரிஷிக்கிறது.’

நமது ராஜதருமநிபுணராகிய அந்தப்புத்திமான், தமது உபந்யாஸப் பெருக்கத்தின் இடையில், 1882-ம் வருஷத்தில் ரிப்பன் பிரபுவாற் கொண்டுவரப்பெற்றிருந்த இரண்டு முக்கியமான நிஷ்கர்ஷப்பத்திரிகைகளையும் சுட்டியறிவித்துச் சென்றார்.

அவற்றுள் முதலாவது:—

“மாகாணத்தை யதிஜாக்கிரதையாகப் போஷிக்கும் விஷயத்திற் கல்வி விஷயமே முதன்மையாகக் குறிக்கப்படவேண்டியிருப்பதால், தேசத்தின் தற்காலநிலைமையை யநுசரித்துப் பொதுஜனங்களுடைய ஆரம்பப்படிப்பின் விஷயமாகவும் அதற்கு ஆகவேண்டிய சேகரத்தின் விஷயமாகவும் அதன் விருத்தியம்சத்தின் விஷயமாகவும், தற்போது இருப்பதைக்காட்டிலும் மிக மேம்பாடுடையதான ஊக்கமான முயற்சியை யுண்டாக்குவிக்கவேண்டிய முறையை முதன் முதலிற் கைக்கொள்ளவேண்டும்;

இரண்டாவது:—

“ஒவ்வொரு மாகாணத்திலும் நிலைமைக்குத் தக்கபடியான சட்டங்களை, ஆரம்பப்படிப்பை விரித்திடுவதின் விஷயமாக அவசியம் ஏற்படுத்தும்படியான முயற்சியைச் செய்யவேண்டும்”

இந்த இரண்டு கட்டளைகளும் பிறப்பிக்கப் பெற்று சுமார் 35 வருஷங்கட்கு மேலாயின. 1882–ம் வருஷத்துக்குப்பிறகு மேற்கண்ட விஷயங்கள் சிறிது முயற்சிக்கப்பெற்று நடந்து வந்ததேனும், அதிகாரிவர்க்கத்தினர் மாதிரிப்பாடசாலை விஷயத்திற் சார்ந்து ஏகாக்ரமனதுடன் இருந்ததன்மையினாற் பெரிதும் தளர்ச்சியடைந்து, 1904-ம் வருஷத்தில் உண்டான இந்திய சர்வகலாசங்கச்சட்டத்தினால் அறவே ஒழிந்துபோயிற்று.

நமது கோகுலரிஷியவர்கள், ஜப்பானில் நடந்தேறிவரும் கல்வியின் அபிவிருத்தியையும் நம்மிந்தியாவில் நடந்தேறிவரும் கல்வியின் அபிவிருத்தியம்சத்தையும் எடுத்தோதி, அவற்றுக்குள்ள அத்யாச்சரியமான வேற்றுமையையும் எடுத்துக் காட்டினர்.

1872-ம் வருஷத்தில், ஜப்பானிய சக்ரவர்த்தியாகிய மிக்காடோ அவர்களால் இடப்பெற்ற கட்டளை பின்வரும்:—

"கல்வி அறிவில்லாதவனுடைய ஒரு குடும்பமாவது, அவ்வறிவில்லாத குடும்பத்தையுடைய ஒருகிராமமாவது நமது தேசத்தில் உண்டாகாதவகையாகக் கல்வியானது அத்தனைமேன்மையாகப் பரவப் பெறல்வேண்டும்." ஆதலினால், இன்றைக்கும் ஜப்பானில், கல்வியானது இலவசமாகவும் கற்பிக்கப்பெற்று வருகின்றது. ஜனங்கட்கு அவ்விஷயத்திற் கவனமும் அதிகப்பட்டுக்கொண்டும் வருகிறது.

தாம் கொண்டுவந்ததீர்மானத்தை முடித்துப் பேசும்போது நமது மஹான் கோகுலர் அவர்கள் பின்வரும் சில குறிப்புகளை வற்புறுத்திச் சென்றார்கள்:—

"எவ்வகையாயினும், ராஜாங்கமானது இரண்டு விஷயங்களைச் செய்யமாட்டாது என்று நம்புகிறேன்; அன்றியும் என்னாற் கொண்டு வரப் பெற்றிருக்கும் தீர்மானமாகிய இலவசக் கட்டாயப்படிப்பு விஷயமாக யாதொரு நிச்சயமான அபிப்பிராயத்தையும் தெரிவிக்கமாட்டாதென்றும், என்னுடைய தீர்மானமானது, ராஜாங்கத்திற் பணமில்லையென்னும் ஒருபோக்கைச்சொல்லி, தள்ளிவிடப்பெறல்கூடாதென்றும் நம்புகிறேன். எனது பிரபுவே! "மனமிருந்தால் வழிபிறக்கும்" என்னும் பழமொழியானது வீண் பழிமொழியாகப் படாது. அதில் உண்மையுண்டு. தவிர, இந்தத்தேசத்தின் தற்கால நிலைமையைப்பற்றிய விஷயங்களுள் முதன்மையிலும் முதன்மையானது இந்தத்தீர்மானமாகிய இலவசக்கட்டாய ஆரம்பப்படிப்பின் விஷயமேயாகும். மானுஷ்ய அதிகாரத்தாற் கொண்டுவரப்பெறவேண்டிய கல்விப் பெருக்கத்திற்காகக் காத்துக்கொண்டு எதிர்நோக்கி யிருக்கும் லக்ஷக்கணக்கான மாணவர்களின் நல்வாழ்வெல்லாம், இந்த இலவசக் கட்டாயப் படிப்பினால் தான் ஆகவேண்டியிருக்கின்றன. ஒவ்வொருவனுடைய வல்லமையின் ஆதிக்கியமும், அறிவின் மேன்மையும், ஒரு கூட்டத்தாரின் ஒழுக்கப்பெருமையும் எல்லாம் இந்த

158

இலவசக்கட்டாயப் படிப்பில்லாமற்போனால், உண்டாகமாட்டா. உண்மையாகச் சொல்லுகிறேன், தேசத்தின் எதிர்காலப்போக்கெல்லாம் சிக்கில்லாமற் கட்டப்பெறல் வேண்டுமானால், இந்த இலவசக்கட்டாயப் படிப்பினாலேயேதானாகவேண்டும். எனது பிரபுவே! இந்தத்தீர்மானமானது அரசாங்கத்தாரால் இன்றைக்கு ஒழுங்குபடுத்தப்பெறாமற் போயினும், இவ்விஷயத்தில் ஜயம்பெற நாங்கள் எவ்வகையிலும் கட்டுப்பட்டவர்களாக இருக்கிறோம், ஏனெனில் நாகரிகலோகத்தாரின் அநுபவவிஷயமும், பிரிட்டிஷ் குடியரசினுடைய அநுதாபமும், தங்களாற் பலமுறைகளிலும் இவ்விஷயமாக ஒப்புக்கொள்ளப்பெற்ற தக்க காரணங்களும் சேர்ந்து, இவ்விஷயத்தை உறுதிப்படுத்திக் கொண்டிருக்கின்றன. இந்தத்தீர்மானம் ஜயத்தைப் பெறும்வரையில் அடிக்கடியும் இதே ஸபையில் திரும்பத்திரும்பக் கொண்டுவரப்பெறும் என்பதில் யாதொரு ஆக்ஷேபணையுமிராது. எனது பிரபுவே! ராஜாங்கமானது தேசத்தின் அவசியமும் தகுதியுமான தேவைகளை நன்றாய் ஆராய்ந்து படித்துப்பார்த்தும் தற்காலப்போக்கை யநுசரித்தும் இந்தவிஷயத்தை முற்றுவிக்கப் பின் வாங்காதென்று உறுதியாய் நம்புகிறேன். இது என்னுடைய முக்கியமான கடமையாகும் என்றே என் மனது வெளிப்படுத்திக்காண்பிக்கிறது. ஒவ்வொரு ராஜதர்மநிபுணனும் செய்யவேண்டிய கடமையும் இதுவேயாகும். ராஜதர்மநிபுண்யமாவது — பொதுஜனங்களுடைய அவசியமான தேவைகளை நன்கு அறிந்து அவற்றையாக்கும் மூலங்களையும் தெரிந்து விரைவுடனும் பரபரப்புடனும் அரசாங்கத்துக்குத் தெரிவித்து அத்தேவைகளைத் தேடிக்கொடுத்துக் குடிகளைச் சுகமுறையில் திருப்பவேண்டியதேயாகும்."

ஆனால், அந்தோ! இந்தத்தீர்மானமானது வழக்கம்போல் அதிகாரிவர்க்க அங்கத்தினரது பெருக்கத்தால் தள்ளிவிடப்பட்டுப் போய்விட்டதென்று எழுதுவதற்கு மிகவும் நாணமுறுகிறோம்.

அன்பர்களே! தேசத்தின் அத்யவசியமான தேவைகளைச் சிறிதும் கவனியாமலும், தேசப் பொதுஜனங்களின் குறைகளைக் கவனியாமலும், தேசாபிமானிகளின் கூக்குரலைச் செவியில் ஏற்றுக்கொள்ளாமலும், தமதுவயிற்றை நிரப்பிக்கொண்டு தமதுமார்பைத் தட்டிக்கொண்டு தலைநிமிர்ந்து நடக்கும் களியாட்டுக் காரராகிய அதிகாரி வர்க்கத்தினரை அங்கத்தினராகவுடைய எந்த ராஜ ஸபையும் எந்த ஆலோசனை ஸபையும் தேசத்துக்கு நன்மையைத்தேட முன் வராது என்பதற்கு இந்த இலவசக் கட்டாயப்படிப்புவிஷயம் ஒன்றே

சாக்ஷியாகும். விஷயமோ அதிக அவசியமானது. கொண்டு வந்தவரோ ராஜாங்கத்தாரால் தாக்ஷிண்யம் காட்டப்படவேண்டிய அதிமேதாவி. அவர் சொல்லிவந்தகாரணங்களோ உண்மையானவைகளும் அனுபவமானவைகளும் தடுக்கப்படக் கூடாதவைகளுமானவை. மற்றொரு தேசமும் இம்முறையினாலேயே அதி சீக்கிரத்தில் விருத்திக்கு வந்திருப்பதாகவும் நிரூபிக்கப்பட்டது, என்றாலும் விஷயம் முடியவில்லை. ஏன்? "மன மங்கில்லை, வழி யங்கில்லை" இது உண்மை.

ஆகையினால், அபிமானிகளே! கதறுவதிலும் கண்ணீர்விடுவதிலும் பயனில்லை. காலம் வீணே கழிகின்றது. தலைமுறைகள் பல தடுமாறிக் கழிந்துசெல்கின்றன. இனியும் தாழ்த்திருத்தல் ஆகாது. ஆங்காங்கு,

முன்னோர் முறைகளை முறைமையிற் பற்றி,
பின்னர் நேர்ந்திடும் பெரும்பயன் கருதி,
தேசியக் கல்வியைச் செழித்திட நிறுவி,
நேசமும் மானமும் நிறையும் பொறையும்
அறவலர் புரவலர் ஆதிய முன்னோர்
திறநலம் மாணவர் தேர்ந்திடச் செய்து
நன்னர் நாட்டினை நலம்பெறச் செய்ம்மினே.

பத்திராதிபர்.

ஸ்ரீ:

வஞ்சிமா நகராராய்ச்சி.

வித்யாபாநுவின் (தொகுதி-ம-பகுதி-சல்) கஉஉ-ஆம் பக்கத் தொடர்ச்சி.

இனி, ஏழாவது சான்றாக, கொங்குநாட்டை அருணகிரியார் சேரர்கொங்கு என்று விளங்கச்சொல்லியிருப்பதையும் விசாரிப்போம்.

அருணகிரியார் வாக்கினில், வைகாவூர் உள்ளநாடு சேரர்கொங்கு என்று கொங்குநாடு விசேடிக்கப்பட்டிருத்தலால், அது சேரர்க்கே யுரியதாகவேண்டுமென்றும், சேரர் குடபுலமன்னராதலாற் கொங்கும் குடபுலமாகவேண்டுமென்றும் வஞ்சிமாநகருடையார் கருதுகிறார்.

இங்கு, வைகாவூருள்ளநாடு "சேரர்கோங்கு" * என்றதனால், கொங்குமண்டலமுழுதும் சேரர்க்கேயுரியதாகும் என்பது சித்திக்கிறதாவென்று பார்ப்போம். சேரர்கொங்கு என்பதில், சேரர் என்பது இங்கு அடைமொழியாய்க் கொங்கிற்கு விசேடணமாயிருக்கிறது; கொங்கு விசேடியமாயிருக்கிறது. விசேடணங்களெல்லாம் பெரும்பாலும் விசேடியப்பொருளைப் பிரிவுபடுத்தித் தம் சம்பந்தமுள்ளதொரு பகுதியைமட்டுமே தந் தொடர்மொழிக்குரிய பொருளாகக் காட்டி, விசேடியத்தின் மற்றைப்பகுதியை விலக்குவனவாயுள்ளன. உதாரணமாக: சேரர்பூமியிற் குட்டநாடுள்ளது என்றால், பூதலத்துள் ஒருபகுதியே சேரர்க்குரியதென்றும், அதிற் குட்டநாடுள்ளதென்றும் பொருள்படுவதல்லது, பூமண்டலமுழுதும் சேரர்க்குரியதென்று சித்திக்கிறதில்லை. அதுபோலச் சேரர்கோங்கில் வைகாவூர் உள்ளது என்றால், அவ்வைகாவூர் உள்ளகொங்கின் ஒருபகுதியே சேரர்க்குரியதென்று பொருள்படுவதல்லது கொங்குமண்டலமுழுதும் சேரர்க்கேயுரியதெனச் சித்திக்கமாட்டாது. ஆதலாற் கொங்குமண்டலத்தின் மற்றொருபகுதி, அடுத்துள்ள சோழர்க்குரியதாமென்பது சொல்லாமலே பெறப்படுகிறது. இதுவே கருவூர்ச் சிலாசாசனத்துட் சொல்லிய "கோனெரின்மைகொண்டான்கொங்கு" என்று சோழன் பெயரால் வழங்கப்பட்டிருக்கிறது.

சோழனுக்கு அப்பெயருண்டென்பதைச் 'சேந்தமிழ்' த்தொகுதி பதினைந்தில் பக்கம் ௯௦௭ ல், வஞ்சிமாநகருடையாராலேயே வெளியிடப்பட்ட கருவூர்ச்சிலாசாசனத்தில், "ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனசக்கரவர்த்தி கோனேரின்மைகோண்டான் குலோத்துங்கசோழதேவர்" எனச் சோழனுக்குப் பெயரடையாக வரையப்பட்டமையாலறியலாம்.

இது, குணபுலத்தரசராதலாற் குடகொங்கு என்ற தொடர்மொழியடையாற் பிரிக்கப்பட்டது மாகிறது. ஆகவே குடகொங்கென்பது கொங்கின் குடபகுதியாய் அப்பகுதியை யடுத்த குடபுலத்தரசராகிய சேரர்க்குரியதாகி, அதுவே சேரர்கொங்கு என வழங்கப்பட்டதென்று தெளியக்கிடக்கிறது. இதனாற் கொங்குமுழுதுங் குடபுலத்

* வஞ்சிமாநகர்—பக்கம் 115.

161

தாசராகிய சேரர்க்குரியதாகாமையாலும், உரிமையாயிருக்கும் பாகம் ஒரு தனிமண்டலமாகாது பிறிதொரு முழுமண்டலத்தின் பகுதியாயிருப்பதாலும், குடபுலம் பிறிதொரு கொங்குமண்டலத்தினுட்பகுதியாகாது ஒரு தனி முழுமண்டலமா யிருக்கவேண்டுமாதலாலும், சேரர் கொங்கினும் வேறாகவே யுள்ளது குடபுலமென்பது பெறப்பட்டது. ஆதலால் இது வாதகக்ஷிக்கே விருத்தமாயிற்று.

இனிச் சேரர்கொங்கென்றது இனம் விலக்காது வெண்டிங்களென்பதுபோலத் தன்னொடியைபின்மைநீக்கியவிசேடணத்தால் விசேடிக்கப்பட்ட தொடர்மொழியெனச் சொல்லவருவாராயினும், தமக்கிஷ்டசித்தியாகிறதில்லை. எப்படியென்றால்? அவ்விசேடணம் தன்னொடியைபின்மை நீக்கலாவது, விசேடியத்துக்குத் தன் சம்பந்தமில்லையென்பதில்லை யென்றதுணையேயுணர்த்துவதல்லது, பிறிதின்சம்பந்த மொரு சிறிதுமில்லையென்றுசொல்லு மாற்றலில்லாமையாற் பிறிதின்சம்பந்தமிருந்தாலுமிருக்கலாம்; இல்லாதுமிருக்கலாம்; என்பதுபடப் பிறிதின் சம்பந்தத்துக்குத் தடையாகாமலே வருமொழியை விசேடிக்கிறது.

இதனை, எடுத்துக்கொண்ட வெண்டிங்கள் என்னு முதாரணத்துள்ளே பார்க்கலாம். இங்கு, திங்களுக்கு வெண்மைநிறமானது தன்னொடியைபின்மைநீக்கிய விசேடணமாயிருக்கிறது. அதாவது திங்களிலேகதேசத்திலுள்ள கருநிறமாகிய மறுவை விலக்காமலே, அதுவும் அத்திங்களிலிருக்கும்படி சகித்துக்கொண்டு, வெண்ணிறமாகிய விசேடணமானது, தன்னியைபு அத்திங்களுக்கு இல்லையென்ப தொன்றையே சகியாததாய், தன் னியைபின்மையைமட்டும் விலக்கித் திங்களுக்கு வெண்ணிறத்தினியைபில்லை யென்பதில்லை (அதாவது திங்களுக்கு வெண்ணிறமுண்டு) என்ற துணையே அதனை விசேடிக்கும் என்பதூஉம்.

ஆகவே சேரர்கொங்கு என்பதனை, தன்னொடியைபின்மைநீக்கிய விசேடணத்தால் விசேடிக்கப்பட்ட தொடர்மொழியெனக் கொள்ளினும், அது அக்கொங்கிற் சோழர்க்குரிய வுரிமையை விலக்காதிருக்கும்படி சகித்துக்கொண்டே, அக்கொங்கிற்குச் சேரர்சம்பந்தமில்லையென்பதில்லை (அதாவது முழுதுஞ் சோழர்க் குரியதன்று சேரர்க்கும் உரியது என்று பொருள்கொள்ளற் கிடங்கொடுப்பதுகாண்க.

இதனை, வெண்டிங்கள் எனக்காட்டிய உதாரணத்துள், திங்கள் முழுதுங் கருநிறத்தால் வியாபிக்கப்பட்டதன்று; வெண்ணிறத்தாலும் ஒருபுடை வியாபிக்கப்பட்டது, என்னும் பொருளே தெளியக் கிடப்பதுகொண் டறிக.

இனி, சோழர்கொங்கு, குணகொங்கு என்னும் வழக்கு, சேரர் கொங்கு குடகொங்கு என்பதுபோலக் கவிப்பிரயோகங்களிற் காணப் படாமையால் அப்படியொருபகுதியே கொங்குமண்டலத்தில் இல்லை யென்பாராயின், தென்கொங்கு, வடபாண்டி என்பனவும் கவிப்பிர யோகங்களிற் காணப்படாமையால் வடகொங்கு தென்பாண்டி என் னும் தொடர்மொழிபடைகளும் இனம்விலக்காதனவாகவேண்டும்; அன்றியும் கருந்திங்களென்னும் வழக்கில்லாமையானும், வெண்டிங்க ளென்னும் வழக்கே யுடைமையானும் திங்களிடத்து மறுவேயில்லை யாகவேண்டும்; அங்ஙனமின்மையா லது கடாவன்றென மறுக்க. திங்க ளிற்சிறந்த பகுதியால் வெண்டிங்களென்றதுபோலக் கொங்கினும் சிறந்த பகுதியாற் சேரர்கொங்கென்றாரெனத் தன்னொடியைபின்மை நீக்கியவிடத்தும் பொருள்கொள்ளக்கிடத்தல் காண்க.

ஆகவே "சேரர் கொங்கு" என்றதனால் எவ்வாற்றானும் கொங்கு சோழர்க்குச் சிறிது முரிய தில்லையென்று சொல்லவொண்ணாமையாலே கொங்கு குடபுலமென்று சாதிக்கவந்த வஞ்சிமாநகருடையார்க்கு இஷ்டஸித்தியாகாமையால் இவ்வருணகிரியார் பிரயோகமும் வாத கக்ஷிக்குப் பாதகமாயும் எதிர்வாதககக்ஷிக்குச் சாதகமாயுமிருக்கிறது.

ஆதலால், கொங்கினைச் சேரர்கொங்கென்ற அருணகிரியார் பிர யோகத்தைக்கொண்டு கொங்கு குணபுலத்திற்சாராது சேரர்க்குரிய குடபுலமென்று சாதிப்பதானது 'வேண்டிங்களுள்வெயில்வேண்டினு' * மென்ற கவிப்பிரயோகத்தைக் கொண்டு, திங்களிற் பிறிதொரு நிறமுஞ் சிறிதுமின்றி முழுதும் வெண்ணிறமே யுள்ளதென்று சாதிப் பது போலும் பிரத்தியக்ஷவிருத்தமாமெனவறிக.

—————

தொடரும்.

செந்தமிழ்.

* புறம்—செய்-38.

ஸ்ரீ:

காலஞ்சென்ற ஸர் சுந்தரலாலர்.

கனம் சுந்தரலாலருடைய உருவம் நமது கண்களிலிருந்தும் மறைந்துவிட்டதாயினும், அவரது புகழுடம்பு இவ்வுலகில் நின்று நிலவிக்கொண்டு வருகின்றது. அவருடைய ஆத்மா, இதுவரையில் இவ்வுலகிலிருந்து தேசப்பொதுநன்மைக்கும் அரசாங்கத்து நன்மைக்கும் உபகரித்துக்கொண்டிருந்ததுபோலவே மறுஉலகத்தினும் உபகரிக்கச் சென்றிருக்கிறது. இவர் மரணத்தினால், ஹிந்து இந்தியாவானது மிகுந்த துக்கத்தையடைந்திருக்கிறது. இந்தத்துக்கத்தை நீக்கமுடியாதவர்களாகவும் தேசபக்தர்கள் இருக்கிறார்கள். காசி ஹிந்துசர்வகலாசங்கத்தை ஸ்தாபிக்கவேண்டிய முயற்சியில், பலவிதத்திலும் ஸ்ரீமான் மதனமோஹனமாளவீயருடன் ஒத்துழைத்துக் காரியஸாதனத்தைத் தேடிமுடித்தவர் இவரேயாவர். இதனால், அந்தச் சர்வகலாசங்கம் இவர் விஷயமாக மிகவும் கடமைப்பட்டிருக்கின்றது. தமது கடைசியான காலம்வரையில் இந்தப் பொதுக்காரியத்திற் கண்ணுங்கருத்தும் வைத்திருந்தார்.

இவருக்கு இவ்விதமான தன்மை நேரிடுமென்று யாரும் ஊகிக்க இடமில்லாதிருந்தது. இவர் தளராத முயற்சியுடன் சங்கத்தை ஸ்தாபித்ததுமல்லாமல், அதற்குவேண்டிய சட்டதிட்டங்களை நியமிப்பதிலும் தமது விவேகசூக்ஷ்மத்தைக் காட்டியிருக்கிறார்.

நமது சுந்தரலாலர் பொதுஜனங்களாலும் அரசாங்கத்தாராலும் சமமாக அபிமானிக்கப்பெற்றவர். அவர் அலஹாபாத் மாகாணத்தின் ஜனப்பொதுத்தலைவர்களில் ஒரு முக்யஸ்தர். இவரது நியாயவாதத் திறமையே இவரை இவ்வித உயர்ந்த நன் மதிப்புக்கு இலக்காக்கியிருக்கின்றது. இவர் நல்ல வருமானம் பெற்றுள்ள நியாயவாதத் தொழிலர். இவர் தமது சம்பாத்தியத்தின் விசேஷபாகத்தைப் பொதுஜனக்கல்வியின்பொருட்டுச் செலவு செய்திருக்கிறார். அலஹாபாத் சர்வகலாசங்கத்திற்கு உதவி அத்யக்ஷராக மூன்றுமுறை ஏற்

படுத்தப்பெற்றிருக்கிறார். இவரைத் தேர்ந்தெடுத்த விஷயத்தால் அரசாங்கத்துக்கு இவர்பால் இருந்துள்ள நன் மதிப்பு வெளியாகிறது. ராஜாங்கமும் இவருக்குப்பல முறைகளிலும் பல பட்டங்களை அளித்திருக்கிறது. இவருக்கு நைட் என்னும் பட்டம் சென்ற வருஷம்தான் கிடைத்துள்ளது. பதின்மூன்று வருஷகாலங்களாக இவர் யுனைடெட்பிராவின்ஸஸ் மாகாணத்துச் சட்டதிட்டககூட்டத்து அங்கத்தினராகவும் அமர்ந்துள்ளார். காங்க்ரெஸ் மஹாஸபைகளிற் பெரும்பாலனவற்றுக்கும் இவர் சென்றிருக்கிறார்.

1910–ம் வருஷத்தில் அலஹாபாத்தில் ஸர். வில்லியம் வெட்டர்பர்ன் என்பவரது அக்கிராஸனத்தில் நடத்திவைக்கப்பட்டிருந்த காங்கிரெஸ் மஹாஸபையில், வரவேற்புச் சபைத்தலைவராக இருந்து உழைத்திருக்கிறார். காலவசத்தினால், இதேவருஷத்திலேதானே ஸர்வில்லியம் வெட்டர்பர்னும் உருவத்தை மறைத்துக்கொண்டு சென்றுவிட்டனர். வெட்டர்பர்ன் தமது நல்ல கிழப்பருவத்திற் காலகதியடைந்தார். இவருக்கோ வயது இப்போது அறுபது காணுகிறது. இவர்களிருவரும் நமது நன்மைக்காகவே உழைத்து வந்தவர்களாதலினால், இவர்களுடைய பிரிவும் நமது நன்மைக்கென்றே நாம் கொள்ளவேண்டும் இவர்கள் இருவருக்கும் இந்தியரெல்லாரும் புத்திரர்களாக விளங்கினார்களேயன்றி, இருவர்க்கும் வேறுசந்தானம் இருப்பதாகத் தெரியவில்லை

ஸர் சுந்தரலாலர் நம்மைவிட்டுப் பிரிந்துபோய்விட்டனரானாலும் காசி ஹிந்துசர்வகலாசங்கமுள்ளவரையில் இவரை நாம் பிரிந்திருக்க முடியாதவர்களாக இருக்கிறோம். ஹிந்து என்று பெயர் கொண்ட ஒவ்வொருவனும் இவரது நாமத்தை மறக்கமாட்டான் என்பது உண்மை. ஏனெனில், காசி ஹிந்துசர்வகலாசங்கத்தில் நின்று நிலவிவரும் சட்டதிட்டங்கள் இவரது ஆலோசனையிலிருந்து தோன்றினவைகளேயாகும். இவரது ஒழுக்கத்தைப் பின்பற்றிநடக்கும்படி நமது இந்திய மாதா நம்மெல்லோருக்கும் அருள்புரிவாராக.

பத்திராதிபர்.

ஸ்ரீ:

திருவிழாநாளும நிவேதனமும்.

உலகத்தில் மனிதனுடைய வாழ்நாளானது சுகதுக்கமிசிரமாகவே நடந்தேறிக்கொண்டுவருகின்றதென்றென்பது யாவரும் நன்கறிந்த விஷயமேயாகும். ஆகையினால், அவன் தனது வாழ்நாளில், தான் எதிர்பாராது அநுபவிக்கநேரும் துக்கபரம்பரைகளிலிருந்து தன்னைத் தப்பவைத்துக் கொள்ளவேண்டிய வழிகளைத் தேடுகின்றான். அந் தத்துக்கபரமபரைகளோ தன்னால் ஒருவிதத்தினாலேனும் நீக்கிக் கொள்ளமுடியாதவைகளாக இருக்கின்றபடியினால், தன்னைக்காட்டி லும் அதிக சக்தியுடையதாகவும் அதிமானுஷ்யமாகவும் உள்ள தொன்றினது துணையை நாடுகிறான். இப்படித் தனக்கு முக்காலங் களிலும் தோன்றும் துக்கபரம்பரைகளை எளிதில் நீக்கும் வல்லமை வாய்ந்தவற்றைக் கடவுளர்களாகப் பக்திபண்ணுகிறான். அந்தக்கட வுளரின்பொருட்டுத் தான் வழிபடும் முறைகளைத் தன்மதக்கொள்கை களென்றும், அவர்களின் குணாதிசயங்களைத் தன்னைப்போன்றவர் களும் நினைவில் தரித்துக்கொள்ளும்பொருட்டுக் கொண்டாடிவரும் வைபவ விசேஷங்களைத் திருவிழாக்கொண்டாட்டமென்றும் அந்த நாட்களைத் திருவிழாநாட்களென்றும் கொண்டனுபவிக் கின்றான்.

இப்படித் தனது துக்கநிவிர்த்திக்காகவும் சுகப்ராப்திக்காகவுமே திருவிழாமுதலியவைகள் நடத்தப்படுகின்றனவேனும் அவை தனது சுயநன்மைக்கென்றே அவனாற் கருதப்படுகின்றனவன்று; ஆனால், அக்கடவுளர்க்குத்தான் செய்யவேண்டிய அவைகள் கடமைக ளென்றும் அக்கடவுளர்களால், தான் பெற்றுக்கொள்பவைகள் உரிமைகளென்றுமே கருதுகிறான். ஆகையினால், இச்செயல் வியா பாரமாகமுடியாமல் ஆண்டானடிமைத்திறமாகவேமுடி கின்றது.

ஆலன் மென்ஸீஸ் என்பவர் தமது "மதசரித்திரம்" என்னும் புஸ்தகத்தில் பின்வருமாறு சொல்லிக்கொண்டுபோகிறார்:—"தனக்கு ஆகாரத்தையும் குடியிருப்பையும்மாத்திரம் தேடிக்கொண்டு காட்

டில் அலைந்துதிரிந்து பிறஜீவர்களை அலைத்துத்திரியும் ஒரு வனசரனும்கூடத் தனது அற்பவிருப்பங்களாகியவற்றையுந் தந்தருளும் பொருட்டுத் தன்னைக்காட்டிலுமுயர்ந்ததன்மையும் மேலானசக்தியும் உடையதாக ஒரு கடவுளைவரித்து அதற்குப் பூசையாதியவற்றையியற்றிக் கும்பிட்டுவேண்டுகின்றான்; அப்போது அத்தெய்வத்தைத் தன்னுருவைப்போன்றதொன்றாகவும் தன்னைக்காட்டிலும் எவ்விதத்திலும் வல்லமையுடையதாகவுமே கருதுகிறான்.” இதுவும் ஆண்டானடிமைத்திறம்தான். இவனும் ஒரு மதப்பற்றுடையவனாதான். இவன் கொண்டாடுவதும திருவிழாத்தான்.

நாகரிகமும் மதக்கொள்கையும் ஒன்றற்கொன்று பிரிந்து நில்லாமல் ஒருமித்துக்கூடியே விருத்தியடைந்துகொண்டுவருகின்றனவென்று கருதவேண்டியிருக்கிறது. ஏனெனில், ஒருமனிதன், உலகக்கூட்டுறவில் விருத்தியாகிவரும் நாகரிகநிலையில் உயரவேண்டுவதன்பொருட்டுத் தனக்குத் தேவையானவற்றைவிரும்பித் தன்னிலும் ஒரு உயர்ந்தசக்தியுடையவஸ்துவைத் தியாகித்தும் பூஜித்தும் கொண்டாடிவருகின்றான். இச்செயலானது மதக்கொள்கைகளைப் பெருக்கிக்கொண்டுபோகின்றதல்லவா? ஆனால், ஒருவனசரனுடைய தேவைகட்கும் ஒருநாகரிகனுடைய தேவைகட்கும் அதிக வித்யாஸங்கள்தோன்றலாம்; இவ்வித்யாஸங்களெல்லாம் அவரவர்வழிபடும்கடவுளருடைய சக்திக்கும் வழிபடும் முறைக்கும் ஏற்றபடியாகவே இருக்கும். வனசரனுடைய தேவைகள் எல்லாம் ராஜஸ தாமஸ விருப்பங்களாகவும், அவற்றுக்காக அவன் வழிபடும் முறைகள் கொடுமையாகவும் உதிரப்பெருக்குடையதாகவும் இருப்பினும், அவன் உலகக்கூட்டுறவில் உறுதிபெற்றுவரும்போது பலமேதாவிகளுடைய சேர்க்கையினாலும் நாகரிகருடைய நடத்தையாலும் தாமஸங்களையொழித்து ராஜஸங்களில் விருப்பங்களைப்பெறவிரும்பியும் பிறகு சுயநன்மையை ஒழித்துப் பரோபகாரத்தைச் செய்யவிரும்பியும், அதற்கு அவசியமானதிருப்தியையும் கருணையையும்பெறவிரும்பி ஸாத்விகத்தில் விருத்தியடைந்து பிறகு நாகரிகனுமாகிறான். ஆக, மதக்கொள்கை

யின் விருத்திக்கு நாகரிகவிருத்தியும், நாகரிகவிருத்திக்கு மதக்கொள்கைகளின் விருத்தியும், ஒன்றற்கொன்று துணையாகநின்று ஒக்கவே பலமடைந்துவருகின்றன.

ஆகவே, மதக்கொள்கைகளாவன, ஆத்மவிருத்திக்கு அவசியமான நாகரிகமுன்னேற்றத்திற்செல்லும் ஒருமனிதன் தனது உலகக்கூட்டுறவில் தன்பொருட்டும் பிறர்பொருட்டும் தான் செய்யவேண்டிய யாகத்யாக யோகங்களுமேயாம் என்று புலப்படுகின்றன. அப்படிப் பல்லாண்டுகளாகப் பலதேசத்தாராலும் அவரவரது அவசியமான தேவைகளையனுசரித்துச் செய்யும்முறைகளாற் பல மதக்கொள்கைகளாக மாறுபட்டுள்ளனவேனும், அக்கொள்கைளெல்லாவற்றினுடைய முக்யாம்சங்கள் யாகத்யாக யோகங்களாகவே நிற்கப்பார்க்கிறோம். இம்மூன்றனுள்ளும் நடுநாயகமாயுள்ள த்யாகமே பிரதானமாகவும் கருதப்படுகின்றது. எத்தன்மையானதேசத்திலும் கடவுளர்கள் தொழப்படும்போது எவ்விதமாகவோ நிவேதனங்கள் ஸமர்ப்பிக்கப்படுகின்றன. அவை ராஜஸ தாமஸ சாத்விகங்களில் ஏதேனும் ஒன்றாகவும்இருக்கலாம்; அன்றிப்பலவாகவும் இருக்கலாம் எப்படி யிருக்கினும், தொழுபவனுக்கும் தொழப்படும் கடவுளுக்கும் உறவு மிகுதிப்பட்டு ஆண்டானடிமைத்திறமே முதிர்கின்றது. கடவுளர்க்குப் படைக்கப்படும் நிவேதன வகைகள் அம்மூன்றுவகைகளில் ஒன்றாகவேனும் பலவாகவேனும் இருக்கினும் ஆமமாகவேனும் பக்குவமாகவேனும் படைக்கப்படினும் அக்கடவுளர்கள் அந்தநிவேதனப் பொருள்களின் ஸாராம்சங்களையே க்ரஹித்துக்கொண்டு ஸ்தூலாம்சங்களைப் படைத்தவர்க்குப் பிரஸாதங்களாகக் கொடுத்துவிடுகின்றார்களென்பதும் எல்லாருடைய கொள்கையாகவும் இருக்கிறது.

ஆகவே, படைப்பவன் வனசரன் ஆயினும்சரி; நாகரிகன்ஆயினும்சரி; அவன் தனக்குவிருப்பமானவஸ்துக்களின் ஸாராம்சங்களையெல்லாம் தனக்குமேற்பட்டதொரு சக்திக்கு மனப்பூர்வகமாக த்யாகம் செய்துவிட்டுத் தூலாம்சங்களையே தான் எடுத்துக்கொள்

கின்றான் என்பதும் உண்மையாயிற்று. ஸாராம்சங்கள் ஸாத்விகங்களாகவும் தூலாம்சங்கள் ராஜஸ தாமஸங்களாகவும் கருதப்படுகின்றன. ஆக, தொழுவானுக்கு த்யாகபுத்தியும் தொழப்படுவதொன்றுக்கு ஸாத்விக விருப்பமுமே பிரதானமாகக் கொள்ளப்படுகின்றன.

இப்படி அடிமையானவன் தனது ஆண்டான்பொருட்டுச் செய்யும் பூஜையிலும் சுத்தஸாத்விக காரியமாகிய த்யாகத்தையே உறுதியாகப் பற்றுகின்றானென்றால், இவனைக்காட்டிலும் எவ்விதத்திலும் உயர்ந்ததென்று கருதப்படும் மூர்த்தி ஸாத்விகக் கொள்கைகளிற் பழகியிராமல் ராஜஸ தாமஸக் கொள்கைகளையுறுதியாகக் கொண்டிருக்கின்றதென்பதை எப்படி நம்பமுடியும் ? அது ஸாத்விகக் கொள்கையுடையதாயின், அதன்பொருட்டுத் தாமஸ ராஜஸ நிவேதனங்கள் படைக்கப்படுவதேன் ? இந்த நிவேதனங்கள் அடிமைகளினுடைய அறியாமையினாலோ ராஜஸதாமஸக் கொள்கையினாலோ தான்படைக்கப்படுகின்றன வென்பதும் உண்மையாகிறதல்லவா ? ஆகையினால் தனது ஆண்டானுக்கு விருப்பமில்லாததொன்றாகவும் தனது ஸாத்விக காரியமாகிய பரித்யாகத்தையும் பரோபகாரத்தையும் கெடுப்பதொன்றாகவும் உள்ள நிவேதனத்தை நிறுத்தித் தனது ஆண்டானுக்கு மிகுதியும் உகப்பானதொன்றாகவும் தனது பரித்யாகத்தையும் பரோபகாரசிந்தையையும் வலியுறுத்துவதொன்றாகவுமுள்ள ஸாத்விகநிவேதனத்தையே தனது, ஆண்டானுக்கு ஒரு அடிமை படைக்கவேண்டுவது கடமையாகவும், ஸாதமமானகொள்கையாகவும் உயர்ந்தமதமாகவும், அதிகநாகரிகச்செயலாகவும் உண்மையான திருவிழாக்கொண்டாட்டமாகவும் மேதாவிகளாற் கருதப்படும்.

பத்திராதிபர்.

ஸ்ரீ:

ஸர். பி. எஸ். சிவஸ்வாமி ஐயர் கே. ஸி. எஸ். ஐ. அவர்கள்.

காசி ஹிந்துசர்வகலாசங்கத்தில் உதவி அத்யக்ஷராயிருந்த கனம். ஸர். சுந்தரலாலர், கே. ஸி. ஐ. இ. அவர்கள் காலஞ்

சென்றபிறகு, நமது ஐயர் அவர்கள் அந்தஸ்தானத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். ஸர். சிவஸ்வாமி ஐயர் அவர்கள், பல வருஷங்களாகவே தென்னிந்தியக் கலாநிபுணர்களில் ஒருவராகப் பாவிக்கப்பெற்றும், சென்னைச் சர்வகலாசங்கத்தில் அதிக அவசியமான தொடர்புடையவராகக் கணிக்கப்பெற்றுமிருந்தவர்களாயினும், தற்சமயம் பூர்விகமதக்கொள்கைகளைப்பரவச்செய்ய முன்வந்திருக்கும் காசி ஹிந்துசர்வகலாசங்கத்தாரால் தேர்ந்தெடுக்கப்பெற்றமை மிகவும் கவனிக்கத்தக்கதொன்றாகஇருக்கிறது. மேனாட்டுக் கீழ்நாட்டுக் கல்விமுறைகளிற் பாண்டித்யமும், நியாயவாதத்தொழிலில் நைபுண்யமும் ஒரு மாகாணத்தலைமைக் குட்பட்ட உயர்ந்தசாலைகளை நடத்திவைக்கும் ஆதிக்யமும்பெற்று, மாகாணத் தலைவர்ஸபையில் ஒரு அங்கத்தினராகவும் இருந்துவந்த நமது ஐயர் அவர்களைச் சர்வகலாசங்கத்தார், ஜனப் பொதுநன்மைக்கென் றேற்படுத்தப் பட்டிருக்கும் ஒரு உயர்தரமான சர்வகலாசங்கத்தின் அவசிய அங்கத்தினராகத் தேர்ந்தெடுத்தமையானது சங்கநிர்வாஹிகளுடைய கார்யநிர்வாஹ விவேகத்திறமையையும் நமது ஐயர் அவர்களது பெருமையையும் வெளிப்படுத்திநிற்கிறது. ஒரு பண்டிதருடைய பெருமையை நாம் நன்றாக அறிய வேண்டுமானால், அவருக்குத் தகுந்த அதிகாரத்தைக்கொடுத்து அதை அவர் நிர்வஹித்துக்கொண்டுபோகும் முறையிலிருந்தே தெரிந்துகொள்ளவேண்டுமானதால், இதுவரையில் அரசாங்கத்துச் சார்பில்மாத்திரம் உழைத்துவந்த நமது ஐயர் அவர்களை இப்போது பொதுஜனங்களின் சார்பிலும் உழைத்துவரும்படி ஏற்படுத்தியிருப்பதானது அவருடைய தகுதியை அவசியம் கவனித்தமையைக் காட்டுகின்றது. நமது ஐயர் அவர்கட்குக் கல்வியின் முன்னேற்றத்தில் தகுந்தநோக்கம் இருக்கிறது என்பதற்கு, அவர்களால், தஞ்சை ஜில்லா திருக்காட்டுப்பள்ளியில் ஏற்படுத்தப் பெற்றிருக்கும் ஒரு உயர்தரக் கலாசாலையே சாட்சியாகநின்று நிலவுகின்றது. சமீபகாலத்தில்தான் அந்தக்கலாசாலையின் கட்டிடத்திலும் சாமான் சேர்க்கையி

னும்படிப்பின் முறைகளிலும் ஒருபெரியசீர்திருத்தத்[illegible]தப் பொருளாதியவற்றாற் செய்துகாட்டியும் இருக்கிறார்கள். ஆகையினால், இவரைக் காசி ஹிந்துசர்வகலா சங்கத்தார் தேர்ந்தெடுத்துக்கொண்டதானது ஒரு ஆச்சரியச் செயலுமாகாது. அவர்கள் தங்கள் கடமையையே செய்துள்ளார்கள்.

நமது ஐயரவர்கட்கு ஸம்ஸ்க்ருதபாஷையிற் பரிசயமும் அந்தப்பாஷைக் கிரந்தங்களினிடத்து நன்மதிப்பும் அவற்றைப்படித்துள்ள சாஸ்திரிகளிடத்து மிகுந்த அபிமானமும் உண்டென்பது அவர்கள் அவ்வக்காலங்களிற் பண்டிதவகுப்பினரைப் பராமரித்த தன்மையிலிருந்து வெளியாகின்றது. இதனால், இவர்கட்குப் பிராசீனமுறையான குருகுல வாசமுறையிலும் மிகுந்தபற்று உண்டாகி இருக்கவேண்டுமென்பது ஊஹிக்கக்கிடக்கின்றது. இதனாலும், இவர்கள் இந்தச்சங்கத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டமைக்குத் தகுதி விளங்குகிறது. சமீபத்தில் டில்லியில் ராஜப்பிரதிநிதி யவர்களால் கூட்டப்பெற்று நடந்த பெருங்கூட்டத்தில் அவர்கள் பேசியுள்ள விஷயத்திலிருந்தும் தமிழ்ச்சங்கத்து வருஷோத்ஸவத்தை நடத்தி வைக்கும் அக்கிராஸனாதிபதித்வத்தை வஹித்து நடத்தியவிதத்திலிருந்தும் இவர்கட்குத் தேசாபிமானமும் தேச பாஷாபிமானமும் ஊறிக்கிடக்கின்றதென்பதும் வெளியாகின்றது. இதனாலும், தேசாபிமானத்தையும் தேச பாஷாபிமானத்தையும் முன்னேற்றுவதற்கென்றேற்படுத்தப்பெற்றிருக்கும் சர்வகலாசங்கத்துக்கு இவரது பொருத்தமுடைமை தெளிவாகிறது.

இவைகளெல்லாம் உறுதிபெறவும் தமது குணம் இன்னும் சிறந்துபரவவும் தேசம் முன்னேற்றம் பெறவும் தேசபாஷைகள் ஆதிக்யம் பெறவும் நமது ஐயர் அவர்கள் நன்கு ஊக்கமுடன் உழைக்கும்படியாக, அவர்கட்குத் தேசாபிமானமும் பாஷாபிமானமும் மதாபிமானமும் இன்னும்பெருகிவரும்படியாகவும் எல்லாம்வல்ல இறைவன் அருள்புரிவாராக.

பத்திராதிபர்

சுலக்ஷணை.

———:()⌶():———

(கசச-ஆம் பக்கத்தொடர்ச்சி)

அசிதா, ஆனால் "நம்முடையதாய் நமக்கு ஏன் இவ்வளவு தாழ்மையான பொய்யைச் சொல்ல வேண்டும்?"

விமலா, "ஏன், ஏன், ஏன்! நீ ஒவ்வொன்றுக்கும் ஏன் ஏன் என்று கேட்டுக்கொண்டேயிருக்கிறாய். நாம் அனேககாரியங்களைக் கண்ணுற்பார்க்கிறோம். அனேகவிஷயங்களைச் சந்தேகிக்கிறோம். அவ்வளவுக்கும் காரணம் நமக்குத் தெரிகிறதா? உதாரணமாகக் கமலினி என்ற தாதிக்கு நமது தாய் ஏன் பயப்படுகிறாள்? விருந்து நடந்த அன்று இராத்திரி கந்தல் துணிகளை உடுத்தியிருந்த ஸ்திரீயை ஏன் அவ்வளவு அவசரமாய்ப் போய்ப்பார்த்தாள்?"

இந்தச்சமயத்தில் ஒரு வேலைக்காரி வந்து சாப்பிடக் கூப்பிட்டாள். சம்பாஷணையும் நின்றுவிட்டது.

சிந்தாமணியினிடம் தன்காதலை வெளிப்படுத்தின தினத்தின் இரவு சுலக்ஷணைக்குத் தூக்கம் பிடிக்கவேயில்லை. அவள் தன் படுக்கையில் உளைந்துகொண்டே கிடந்தாள். அன்றிரவு எத்தனை ஏழைஜனங்கள்,—வைக்கோலைப்பரப்பி அதன்மேற் படுத்துக்கொள்பவர்கள்—, உயர்ந்த வெல்வெட் (Velvet) பட்டினால் தைக்கப்பட்டிருந்த மெத்தையிற்படுத்திருந்த புவனாலயம் ஜமீந்தாரணியாகிய சுலக்ஷணையைவிட அதிக இனிமையான நித்திரையை அனுபவித்தார்கள். அவளுடைய இருதயம் கணக்கில்லாத தேள்களாற் கொட்டப்பட்டது போன்ற துன்பத்தை அடைந்தது. சிந்தாமணியை நேசித்ததுபோற் பகைக்கமுடியும் என்று அவள் சொன்னபோதிலும் பழிவாங்குவதற்கு யோஜித்துக்கொண்டிருந்தபோதிலும், அழகுள்ள வாலிபனாகிய அச்சிந்தாமணியின்மேலுள்ள ஆசையாகிய நெருப்பு அவள் மனதைத் தகித்துக்கொண்டுதானிருந்தது.

அவள் காலையில் தன்னுடைய நோத்தியான மெத்தையைவிட்டு எழுந்திருந்தாள். அன்று மத்தியானம் இரண்டுமணிக்குமேல்

மூன்றுமணிகளுள் நீலாம்பாள் வீட்டெதிரிற் சுலக்ஷணாவின் வண்டி வந்துநின்றது. நீலாம்பாளும் அம்புஜமும். சுலக்ஷணா வந்தபோது ஒன்றாய் உட்கார்ந்திருந்தார்கள். அவர்களிருவரும் சுலக்ஷணாவின் முகம் ஒருவிதமாய் இருப்பதைக் கவனித்தார்கள்

" நீலாம்பாள், " ஏதாவது வருத்தத்தைத் தரக்கூடிய சம்பவம் நடந்ததா? "

" வருத்தமா? என் முகம் என்மனதில் இருப்பதை வெளிப்படுத்துகிறதுபோலும். நான் அதை உங்களுக்குச் சொல்லவேண்டுமென்று கருதவில்லை. ஆனால் நான் அதை யேன் இரகசியமாய்வைத்திருக்கவேண்டுமென்பதும் எனக்குத்தெரியவில்லை, " என்று சுலக்ஷணா முதலில் ஆச்சர்யத்தை அடைந்தவள்போற் பாவனைசெய்து, பிறகு சிரித்துக்கொண்டே சொன்னாள்.

நீலாம்பாள், " நீ சிரிப்பதைப் பார்த்தால் துக்ககரமான சம்பவம் ஒன்றும் நடக்கவில்லை என்று நினைக்கவேண்டியிருக்கிறது. "

சுலக்ஷணா, " அது வேடிக்கையானது. ஆனாற் கொஞ்சம் வருத்தத்தையும் கொடுக்கிறது. "

நீலாம்பாள், " எனக்கும் அம்புஜத்திற்கும் நீசொல்வது விளங்கவில்லை. "

சுலக்ஷணா, " அம்புஜம்! நீ சிந்தாமணி என்பவனிடத்திற் சித்திரம் எழுதக் கற்றுக்கொள்ளுகிறாயல்லவா? "

திடீரென்று கேட்கப்பட்ட இந்தக்கேள்வியானது அம்புஜத்தின் மனத்திற்சொல்லமுடியாத குழப்பத்தை யுண்டுபண்ணிற்று. அவளுடைய முகம் மாறிமாறிச் சிவப்பதும் வெளுப்பதுமா யிருந்தது. அவளைச் சுலக்ஷணா ஆச்சர்யத்தோடு நோக்கினாள்.

" என்ன! அம்புஜம் உனக்கு உடம்பிற்கு என்ன செய்கிறது? " என்று சுலக்ஷணா கேட்டாள். தன்னுடைய கேள்வியினால் அம்புஜத்தின் மனதில் உண்டான குழப்பத்திற்குக் காரணம் அவளுக்கு முதலில் விளங்கவில்லை. ஆனால் ஒருநிமிஷத்தில் அவள் மனதில் ஒரு சந்தேகம் உண்டாயிற்று.

அம்புஜம், "தாங்கள் சம்பாஷணையைத் திடீரென்று மாற்றினது என்னை மயங்கச் செய்தது."

நீலாம்பாள், "நீ எவ்வளவு விநோதமாய்க் காணப்பட்டாய் என்பதை நானும் கவனித்தேன். ஆனால் அது கிடக்கட்டும். சுலக்ஷணா, உனக்குச் சித்திரமெழுதக் கற்பிக்கும் சிந்தாமணியைப்பற்றி ஏதோ சொல்லப்போகிறாள் போலிருக்கிறது."

"நான் சொல்லப்போவது மிகவும் வேடிக்கையானது," என்று சுலக்ஷணா நீலாம்பாளிடம் சொன்னாள். சொல்லும்பொழுது அம்புஜத்தை அதிகக்கவனத்தோடு கடைக்கண்ணாற்பார்த்துக்கொண்டே இருந்தாள். "நீங்கள் அதை நம்புவீர்களா? சித்திரம் கற்பிப்பதிற் பேர்போனவனும், உயர்குடும்பங்களிலெல்லாம் கற்பிப்பவனுமாகிய சிந்தாமணிக்குத் தன்னுடைய நல்லதிர்ஷ்டத்தினாற் புத்திமாறிவிட்டது. நான் எப்பொழுதும் அவனை யோக்கியதையும் நல்ல நடத்தையும் உள்ளவனென்று எண்ணியிருந்தேன்."

நீலாம்பாள், "நானும் அவனைப்பற்றி அவ்விதமான அபிப்பிராயந்தான்கொண்டிருந்தேன். ஆனால் அந்த அபிப்பிராயத்தை மாற்ற வேண்டிய அவசியம் நேரிட்டால் நான் வருத்தமடைவேன். என்ன நடந்தது?"

அம்புஜம் ஒன்றும் சொல்லவில்லை. ஆனால் அவள் தன் அத்தை கேட்ட கேள்விக்குச் சுலக்ஷணா என்ன பதில் சொல்லப்போகிறாள் என்று மிகவும் ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள். அவள் மனதிற் பலவிதமான தோற்றங்கள் உண்டாயின. அவளுக்கு ஒரு நிமிஷம் செல்வது ஒரு யுகம்போலிருந்தது. இவ்விதமான மனோநிலையில் இருப்பவர்களுக்கு ஒரு விநாடி நேரம் நூற்றுக்கணக்கான வருஷங்களைப்போல் தோன்றுவது வழக்கம். அம்புஜம் தன் மனோநிலைமையை வெளியே தெரியாமல் மறைத்துவிடமுயன்றாள். அவளுடைய அத்தை அவளைக் கவனிக்கவில்லை. சுலக்ஷணாவும் அவளைக் கவனியாதவள்போற் காணப்பட்டாள். ஆனால் உண்மையில் அவள் அம்புஜத்தின் முகத்தில் உண்டாகும் ஒவ்வொருதோற்றத்தையும் வெகுநுட்பமாய்க் கவனித்தாள்.

நீலாம்பாளின் கேள்விக்குப் பதிலாய்ச் சுலக்ஷணு சொல்லுகிருள், "என் பிரியமான தோழி! என்ன நடந்ததென்று நீ என்னைக் கேட்கிருய். உன்னல் அது என்னவென்று ஊகித்தறியமுடியாது, நான் அதைச்சொன்னுல் உன்னுல் நம்பவும் முடியாது. ஒரு விதத்தில் நான் அதனுல் திருப்தி அடையவேண்டுமென்று நீ ஒரு வேளை சொல்லாம். ஒரு விதத்தில் நான் கோபித்துக்கொள்ளவேண்டுமென்று சொல்லுவாய் மற்றொரு விதத்தில் நான் ஆச்சர்யப்படவேண்டுமென்று நீ சொல்லுவாய்."

நீலாம்பாள் ஆச்சர்யத்தோடு சொல்லுகிருள், "நீ சொல்வது இப்பொழுதுதான் எனக்கு விளங்க ஆரம்பிக்கிறது. ஆனல் அது நடக்கத்தக்க காரியமா?"

சுலக்ஷணு, "ஆம், அது உள்ளபடியே நடந்தது."

இந்தச் சம்பாஷணை அம்புஜத்திற்கு மிகுந்த வருத்தத்தை உண்டுபண்ணிற்று. அவளுடைய முகத்திலுண்டான மாறுதல்களையும், அவைகளை அவள் மறைக்கமுயன்றதையும் நுட்பமாகக்கவனித்த சுலக்ஷணுவிற்கு அவளுடைய சந்தேகம் உறுதிப்பட்டது. சிந்தாமணியாற் காதலிக்கப்பட்டவள் அவள்தானென்று அறிந்துகொண்டு, அம்புஜத்தைத் தன் விரோதியாகப் பாவித்தாள். ஆகையாற் சொல்லவேண்டியதை உடனே சொல்லாமல் அதைப்பற்றி ஜாடையாய்க் கொஞ்சங்கொஞ்சமாய்ச் சொல்லுவது அவளுக்கு ஆனந்தமாயிருந்தது. ஏனென்றுல் இப்படிச் சொல்வதனுல் அம்புஜத்திற்கு அதிக நேரத்திற்கு வருத்தத்தைக் கொடுக்கலாம் என்பது அவளுடைய கருத்து.

நீலாம்பாளிடம் பேசுபவள்போற் பாவனைசெய்து சுலக்ஷணு மறுபடியும் ஆரம்பித்தாள், "நான் சொன்னவற்றிலிருந்து நீ யறிந்துகொண்டது உள்ளபடியே நடந்தது. எனக்கு எவ்வளவு ஆச்சர்யம் உண்டாயிருக்குமென்பதை யோசித்துப்பார். ஆனுற் சிந்தாமணி இப்படிச் செய்வானென்று யார் எண்ணியிருப்பார்கள். அவனைப்போன்ற புத்திசாலியான வாலிபன் அப்படிச் செய்வதென்றுல்—ஆச்சர்யமாயில்லையா?"

நீலாம்பாள், "ஆம், அதிக ஆச்சர்யமாகத்தா னிருக்கிறது."

அம்புஜத்தினுடைய துக்கத்தைக்கண்டு மனதிற் சந்தோஷப் பட்டுக்கொண்டு சுலக்ஷணு சொல்லுகிருள், "அந்தமூட்டாள், தான் கொஞ்சம் அழகாயிருப்பதனுலும், கொஞ்சம் புத்திசாலியாயிருப்பத னுலும், கற்பிக்கும் உயர்குடும்பங்களில் நன்ருய் நடத்தப்படுவதனு லும்——"

"சிந்தாமணி என்ன செய்தானென்று உன் வாயால் இன்னும் சொல்லவில்லையே. என்ன நடந்திருக்கலாம் என்று சுலபமாய் ஊகிக்க லாம். சுருக்கமாய், நீ அவனைக் காதலிக்கிருய் என்று எண்ணிக் கொண்டான்போலும்," என்று நீலாம்பாள் சொன்னுள்.

சுலக்ஷணு, "ஆம், அதுதான் உண்மை. அது நேற்றுநடந்தது. என்னுடைய புத்திரிகள் வெளியே போயிருந்தார்கள். நான்மாத் திரம் தனியாய் இருந்தேன். சிந்தாமணி என்வீட்டிற்கு வந்தபொழுது மறுநாள் எத்தனைமணிக்கு வருவதென்பதை நான் அவனுக்குச் சொல் வதற்காக, வேலைக்காரன் அவனை என்னிடம் அழைத்துவந்தான். அவனுடைய பார்வையும் நடத்தையும் ஒருவிதமாய் இருப்பதாக எனக்குத் தோன்றிற்று. அவன் ஏதோ என்னிடம் கேட்கஎண்ணின வன்போலவும், ஆனுல் அதைக் கேட்கத் துணியாதவன் போலவும் காணப்பட்டான். என்னிடத்தில் ஏதோ ஒரு உதவிகேட்கவிரும்புகி ருன் என்று என் மனதிற் பட்டது. அவன் மனதில் இருந்த விஷ யம் எனக்குத் தெரியாதபடியால், அவன் என் உதவியைக்கோரினுல் செய்யலாம் என்று நினைத்துக்கொண்டு அவன் மனதிலுள்ளதைவெளி விட்டுக் கேட்டுக்கொள்ளச் சொன்னேன். உடனே அவன் என் னென்னமோ வாயில் வந்ததெல்லாம் பேசஆரம்பித்தான். அவனுக் குப் பைத்தியம்பிடித்துவிட்டதோ அல்லது ஏதாவது ஒரு நாவலை மனனம்பண்ணி ஒப்புவிக்கிருனே என்று எண்ணிக்கொண்டு, மிகவும் ஆச்சர்யத்துடன் அவன் சொன்னதைக் கேட்டுக்கொண்டிருந்தேன். வரவர அவனுடைய வார்த்தைகள் எனக்குக் கோபத்தை உண்டு பண்ணினபடியால் நான் இருந்த இடத்தைவிட்டு எழுந்திருந்தேன்.

அப்பொழுது அவன் தன்னுடைய சந்தோஷமும், உயிரும் என் கையிலிருக்கிறதென்று சொல்லிக்கொண்டே என் காலில்விழுந்தான். நான் அவனுக்கு இரங்காவிட்டால் தற்கொலைசெய்துகொள்வதாகச் சொன்னான்."

நீலாம்பாள், "நான் இதுவரை இவ்விதமான சமாசாரத்தைக் கேள்விப்பட்டதே இல்லை. இப்படிப்பட்டவனை அம்புஜத்திற்குச் சித்திரமெழுதக்கற்பிக்க ஏற்படுத்தினதையும், அவளுடன் தனியாயிருக்க விட்டதையும் நினைத்தால் எனக்கு மனம் நடுங்குகிறது."

சுலக்ஷணா, "அவனுடைய குணம் இப்படிப்பட்டது என்று அறியாமல் நானும் அவனை என் புத்திரிகளுக்குச் சித்திரம் கற்பிக்க நியமித்தேன். அவனுடைய சிஷ்யபிள்ளைகளில் அநேகர் என்னைவிட இளமையாயும் அழகாயுமிருக்க, அவர்களையெல்லாம் விட்டு, அவன் என்னைக் காதலித்தது எனக்குப்பெருமையை உண்டு பண்ணவேண்டும். அம்புஜம், உன்னுடைய காலில் அவன் விழாமலிருந்தது எனக்கு ஆச்சர்யத்தைக்கொடுக்கின்றது."

அம்புஜம் பெருந்துக்கத்தை அடைந்தாள். தன் வருத்தம் வெளியே தெரியாதபடி அடக்க முயன்றதனால் அது அதிகரித்தது. அவளுடைய முகம் சலவைக்கல்லைப்போல் வெளுத்துவிட்டது.

தன்னுடைய தமையன் மகளுக்கும், நடந்துகொண்டிருந்த சம்பாஷணைக்கும் உள்ளசம்பந்தம் நீலாம்பாளுக்குத் தெரியாதபடியால், அவள் அம்புஜத்தைக் கவனியாமற் சொல்லுகிறாள், "இந்த அசாதாரணமான சம்பவம் எப்படி முடிந்தது?"

சுலக்ஷணா, "அது எப்படி முடியவேண்டுமோ அப்படித்தான் முடிந்தது. சிந்தாமணியை நான் கோபத்தோடு என்வீட்டுவாசற்படியில் இனிமேல் அடியெடுத்துவைக்கக்கூடாது என்று கட்டளையிட்டு வெளியேபோகச்செய்தேன். அவன் பழிவாங்குவதாகப் பயமுறுத்திக்கொண்டே வெளியே போனான். நான் அந்தப்பரிதாபகர

மான வாலிபனுக்குத் தீங்குசெய்ய எண்ணமில்லை. ஆனல் அவனை என் தோழிகள் வீட்டிற்கு வரவிடக்கூடாது. "

நீலாம்பாள், " அடுத்தமுறை அவன் இங்கே வரும்பொழுது கதவைச்சாத்திவிடுவேன். நீ அவனுடைய அபாயகரமான குணத்தை எங்களுக்குத் தாமதமில்லாமற் சொன்னதற்காக நானும் அம்புஜமும் உனக்கு நன்றிசெலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேம், அவன் உன்னைப் பய முறுத்தினனு? "

சுலக்ஷணு, " ஆம், அதுதான் தாழ்ந்த குணமுள்ளவர்களின் வழி. நான் அதற்கு ஒரு சிறிதும் பயப்படமாட்டேன் என்பது உனக்குத்தெரியும். "

நீலாம்பாள், " நீ பயப்படமாட்டாயென்பது எங்களுக்குத் தெரியும். மேலும் நம்மைப்போன்ற உயர்குடும்பத்தார்களை அந்தப்பய முறுத்தல்கள் ஒன்றுஞ்செய்யமாட்டா. ஒருவேளை தன்னைமன்னிக்கும்படி அவன் கடிதம் எழுதலாம். "

தன்னுடைய கதை மெய்போற்காணப்படுவதற்கு நீலாம்பாள் கடைசியாகச் சொன்னது உதவியாயிருக்கும் என்றுகருதிச் சுலக்ஷணு சொல்லுகிறள், " ஆம் நான் மறந்துபோய்விட்டேன். இன்று அவனிடமிருந்து ஒருகடிதம் வந்தது. நான் அதைப்பிரித்துப் பாராமல் திருப்பி அனுப்பி விட்டேன். நேரமாயிற்று, நான் போய்வருகிறேன். மற்றைய தோழிகளையும் பார்க்கவேண்டும். "

நீலாம்பாள், " உன்னுடைய தோழிகளையெல்லாம் இந்த வாலிபனிடத்தில் உஷாராயிருக்கும்படி சொல்லுவாய் என்று நம்புகிறேன். "

சுலக்ஷணு, " அது என்னுடைய கடமை. வருத்தத்தைத்தாதக்க கடமையாயிருந்தாலும் நான் அதை நிறைவேற்றுவேன். நான் போய்வருகிறேன் "

பிறகு சுலக்ஷணு நீலாம்பாளின் வீட்டைவிட்டுப் போனள். அம்புஜம் ஜன்னலண்டைபோய் நின்று தன் கண்ணீரைத் துடைத்துக்கொண்டாள்.

ஓரிரவின் சம்பவம்.

முந்தின அத்தியாயத்திற் சொல்லப்பட்ட சம்பவங்கள் நடந்த அன்றிரவு மணி பன்னிரண்டாயிற்று. வீரசிங்கம் வீதியில் நடந்து கொண்டிருந்தான். வழியேபோகாமல் மேலும் கீழும்பார்த்துக் கொண்டிருந்தான். அவன் யாருடையவரவையோ எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். எதிர்பார்க்கப்பட்டவன் வாராததனால் வீரசிங்கம் தனக்குள், பின் வருமாறு முணுமுணுத்துக்கொண்டான். " அவன் வாராவிட்டால், அவனுக்குப் புத்திகற்பிக்கிறேன்."

போலீஸ்காரர்களுக்குத் தென்படாமலிருக்கும்படி அவன் ஓரம் ஒதுக்குகளில் நின்றுகொண்டிருந்தான். அவனால் எதிர்பார்க்கப் பட்ட மனிதன் வாராததனால் அவனுக்குக் கோபம் அதிகரித்தது. இரவு வெளிச்சமாயிருந்தது. வீதிகளிலெல்லாம் விளக்குகள் எரிந் தன. ஆதலினால் வீரசிங்கம் நிழலானதும் இருட்டானதுமான இடங் களிற் பதுங்கி யிருக்கவேண்டியிருந்தது. "இரவு அதிக இருட்டா யில்லாததனால் நான் என்காரியத்தைச் செய்யமாட்டேன் என்று அவன் நினைக்கிறான்போலி ருக்கிறது. ஆனால் அவன் சொன்னபடி கேட்கவேண்டியவனே தவிர இவ்வித அபிப்பிராயங்கொள்ள அவ னுக்கு எவ்வளவு துணிவு? புதிதான இடத்தில், உள்ளே கூட்டாளி கள் இல்லாமற் புகுவதற்கு வெளிச்சமான இரவுதான் நல்லது. 'திருட்டுவேலைக்கு ஏற்றது இருட்டுவேளை,' என்று எண்ணிச் சிலர் இருட்டான இரவுகளிற்றான் காரியம் பார்ப்பார்கள். அது அனேக சமயங்களில் நயமாயிருந்தாலும், எப்பொழுதும் அதன்படி நடக்கக் கூடாது. இதோ வருகிறான் சாமுண்டி," என்று வீரசிங்கம் மறு படியும் தனக்குள்ளேயே முணுமுணுத்துக்கொண்டான்.

சாமுண்டி என்பவன் பேயாண்டி கடைக்குவரும் திரு டர்களில் ஒருவன். அவனுக்கு வயது சுமார் இருபத்தைந்து இருக் கும். அவன் மிகவும் அழுக்குப்படிந்த வஸ்திரங்களை உடுத்தியிருந் தான். அவனுக்காகத்தான் வீரசிங்கம் காத்துக்கொண்டிருந்தான்.

(தொடரும்) வ. வி. நடேசன்செட்டி. ஆத்தங்குடி.

மதிப்புரை.

ஸ்ரீ லோகமாதா—இத்தகைய பெயருடைய மாதாந்தத்தமிழ்ப் பத்திரிகையொன்று, திருவாங்கூர் ஸமஸ்தானம் புனலூரில் ஸ்தாபிக்கப்பெற்றுள்ள சாரதாநிலையத்திலிருந்து சித்திரைமாதம் முதல் வெளியாகிக்கொண்டு வருகின்றது. இது பிரிண்டிங் டெம்மி புஸ்தக ஸைஸில் 40 பக்கங்கொண்ட ஸஞ்சிகை ரூபமாக மாதந்தோறும் வெளியாகிறது. இதனுள் பலஅரியபெரிய விஷயங்களும் ஆராய்ச்சிகளும் வெளியாகின்றன. இதன் ஆசிரியர் வித்வான் ம. மு. நாராயணசாமி அவர்கள். இப்பத்திரிகைக்குக் காரியஸ்தரும் சொந்தக்காரருமாவார், புனலூர்வாசி ஸ்ரீமான் இ. எஸ். சிவராமலிங்கம் பிள்ளை அவர்கள். இதன் வருடச்சந்தா, காகிதவிலை ஏறியுள்ள இக்காலத்திலும் ரூ. 1—8—0 தான். தமிழ்மக்களும் தமிழபிமானிகளும் தேசாபிமானிகளும் இதனையும் இதுபோன்ற பத்திரிகைகளையும் ஆதரிக்கக் கடமைப்பட்டுள்ளார்கள்.

2. பிரணவகோஷம்—இது காரைக்குடி ஹிந்துமதாபிமான சங்கத்திலிருந்து வெளிவந்துள்ள முதற்பிரசுரம். இதன் நாமத்தைக்கொண்டே, இந்தஸங்கமானது தனதுபெயருக்கிணங்க ஹிந்து மதவுண்மைகளை உண்மதக்கலகமின்றியே பிரசுரப்படுத்திக் கொண்டு வரும் என்பது வெளியாகிறது. இச்சிறுபுத்தகம் ஞானபாநுவில் ஸ்ரீ சுப்பிரமணியசிவா அவர்களால் எழுதப்பெற்றுள்ள பிரணவகோஷமென்னும் விஷயத்தின் புஸ்தகப்பதிப்பேயாகும் என்று இச்சங்கத்தார் இதன் முன்னுரையில் கூறியிருக்கின்றார்கள். இப்புத்தகம் இனாமாகவே அளிக்கப்படும். இந்தப்பிரசுரம், காரைக்குடி ஸ்ரீமான். தி. அரு. அ. வெ. தியாகராஜசெட்டியார் அவர்களது பொருளுதவிகொண்டே முதன் முதல் 2000 பிரதிகள் அச்சிடப்பெற்று விநியோகத்துக்கு அர்ஹமாக இருக்கின்றது. இச்சங்கத்தார்க்கு, மதாபிமானத்திலும் பாஷாபிமானத்திலும் தேசாபிமானத்திலும் உள்ள ஊக்கத்தைப்பெருக்கி உலக உபகாரிகளாக இவர்கள் உழைத்துவரும் மார்க்கத்தை ஈசன் மேன்மேலும் அருள் புரிவாராக.

3. ஆங்கிலத்தின் எழுத்துக்கூட்டு முறையும் உச்சாரண முறையும்—இத்தகையபுத்தகமொன்று, வேலூர் வக்கீல் ம-ா-ா-ஸ்ரீ ஸி. வி, நரஸிங்கராவ் ஸாஹிப். பி. ஏ. பி. எல். இவர்களால் இயற்றப் பெற்று வெளியாயிருக்கிறது. இதனுள் ஆங்கிலம் ஆரம்பிக்கும் இந்திய மாணவமாணவிகட்கு உபயோகமான லகுமுறைகள் எழுதப்பட்டுள்ளனவென்று இதனுசிரியர் குறிக்கின்றூர். இதனைப்படிக்க ஆரம்பித்த ஆறுவதுவாரத்தில் ஒவ்வொருவரும் இங்கிலீஷை நன்றாக உச்சரிக்கவும் எழுதவும் கற்றுக்கொள்வார்கள் என்றும் குறிக்கிறூர். பாடங்களையெல்லாம் விளையாட்டுமுறையாகவே கற்பிக்கின்றனவென்றும், எழுத்துவாஸனை தெரிந்த ஒருவன் இதனை மற்றவர் உதவியின்றியே கற்றுக்கொள்ளலாமென்றும் இதன் ஆசிரியர் குறிக்கின்றூர். இதன்விலை அணு பன்னிரண்டேதான். வேண்டுவோர் இதனையியற்றினூர்க்கு எழுதிப்பெற்றுக்கொள்ளலாம்.

பத்திராதிபர்.

உ

புதுக்கோட்டை ராஜ்யம்.

10-ம் தொகுதியின் 154-ம் பக்கத்தொடர்ச்சி.

நீர்ப்பாசனப் பெருக்கம்.

சென்ற பதினைந்துவருஷங்களாக இந்தஸமஸ்தான ஆட்சிமுறையிற் பலவகையான பெருக்கங்கள் காட்டப்பெற்றுள்ளனவேனும் பாசனவிஷயமான முயற்சியே அதிகப் பெருக்கத்தைக்காட்டி நிற்கும். நீர்ப்பாசனவசதிகளை விருத்திசெய்யவேண்டியதன்நிமித்தமாக 1899—ம் வருஷத்தில் ஒரு புதியஸபைகூடிப் பேசினதில் அதிற்சேர்ந்திருந்த ஒரு தேர்ச்சிபெற்ற இஞ்சினியரையே அதன் விஷயமான தகுந்த ஏற்பாட்டைச் செய்யும்படி ஏற்பாடுசெய்திருந்தார்களெனினும் அவர் தகுந்த ஏற்பாடுசெய்ததாகப் புலப்படவில்லை ஆனல், அந்தந்த ஸ்தானத்துப் பூர்விகர்கள் ஸமஸ்தான நீர்ப்பாசன

விஷயத்திற் சிரத்தையெடுத்து உழைத்துவந்தார்கள். என்றாலும் பிற்பட்டவர்கள் அந்தமுறையை ஒழுங்காகக் கைப்பற்றி வந்திராத தன்மையால், தர்பார் அவர்களே நேரிற் கவனிக்கும்படியும் நேர்ந்தது.

1899—ம் வருஷம்முதல் 1909—ம் வருஷம் வரையில் உள்ள பத்துவருஷங்களில், ஸமஸ்தானத்திலுள்ள நீர்ப்பாசனவசதிகளை யொழுங்குபடுத்தவும் பெருக்கவும் தர்பாரிலிருந்து சுமார் நான்கரை லக்ஷம்ரூபாய்கள் செலவுசெய்யப்பெற்றன. சென்ற ஏழுஎட்டு வருஷங்களில் நீர்ப்பாசனவசதிகள் இன்னும் அதிகப்பெருக்கத்தைக் காட்டியுள்ளன. சிறிய கேணிகள்முதற் பெரியகுளங்கள்வரையிலுள்ள நீர்ப்பாசனவசதிகள் ஸமஸ்தான ஸூபரிண்டெண்டெண்டவர்களாற் பார்வை யிடப்பெற்று ஒழுங்குபடுத்தப் பெற்றிருக்கின்றன. 1318—ம் பசலியிலிருந்து 1321—ம் பசலி வரையில் இதன் விஷயமான செலவுரூபாய் 30,191—இலிருந்து ரூபாய் 87,257—வரையிற் செலவில் உயர்த்தப்பெற்றிருக்கின்றன. பல குளங்களின் அவசரத்தை முன்னிட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பெற்றுச் செலவுக்குத் தகுந்த வேலைகளும் நடந்தேறிவருகின்றன. 1909—ம் வருஷத்திற் சிறியஅளவான நீர்ப்பாசனவேலை யாரம்பிக்கப்பெற்று, 50-ஏகர் வரையில் நிலங்கள் பாய்ச்சப்பெற்று நிலவரி வரும்படியில் தகுந்த ஊதியத்தைக் கொடுக்கக்கூடிய அளவு பண்படுத்தப்பெற்றிருக்கின்றன.

நிலுவை வசூல்:—

1314-1315-ம் பசலிகளில் நேர்ந்த சிலகாரணங்களால் சுமார் ஐந்தரை லக்ஷம் ரூபாய்கள் வரையிலும் வரிகள் வசூலிக்கப்படாமலிருந்தன. நிலுவைவரிகள் அதிகமாய்ச் சேர்ந்துவிட்டபடியாலும் செலவின் நிமித்தம் நிலங்களை ஒத்திவைத்து வாங்கியிருந்தகடன் தொந்திரவினாலும் குடித்தனக்காரர்கள் மிகுந்தசிரமத்தைக் கடக்க முடியாமல், ரெவினியூ உத்தியோகஸ்தர்களுடைய தஜயக்குமிகவும்

பாத்திரர்களாக இருந்து வருந்திக்கொண்டிருந்தார்கள். ஆகையினால், புது செட்டில்மெண்டு தொடங்குவதற்குமுன், மேற்கண்ட நிலுவைகளைத் தள்ளிக்கொடுத்தேனும் பட்டாதார்களை நூதனசெட்டில்மெண்டுக்குத் தகுதியுள்ளவர்களாகச்செய்விக்கவேண்டுவது அவசியமாக இருந்தது. இதற்காக, 1909-வருஷம் செப்டம்பர் மாதத்திலிருந்து ஒருதனி ஜமாபந்தி ஆரம்பிக்கப்பெற்று 1912-ம் வருஷ ஆரம்பத்துடன் நிறைவேறியது. அப்போது மாகாண சூப்பரின்டெண்டெண்ட் அவர்கள் தமது பரிவாரங்களுடன் 4-5 வட்டங்கட்குச் சவுகரியமாக உள்ள ஸ்தானங்களில் தங்கியிருந்து, அங்கு வந்து சேர்ந்த பெரும்பான்மையோரான பட்டாதார்களுடைய தகராறுகளை விசாரித்தும் அவ்விடங்களிலுள்ள குளங்களையும் ஆயர்கட்டுகளையும் பார்வையிட்டும் ஏற்றபெற்றி சவுகரியங்களைச் செய்து கொடுத்துக் குடித்தனக்காரர்களை ஒழுங்குபடுத்தினார்கள். இந்த வேலை, வரிவசூல்களில் ஏற்பட்டிருந்த நிலுவைகளை ஒழிப்பதற்காக மாத்திரம் ஏற்பட்டதாக ஆகவில்லை; ஆனால் மாகாணத்தில் ஏற்பட்டிருந்த ஆட்சிமுறையின் நிலுவைகளையும் ஒழித்ததாகவும் ஆயிற்று. ரெவின்யூமுதலிய இலாகாக்களின் உத்தியோகஸ்தர்களது யோக்கியதாவிஷயங்களும் நன்றாகப் பரிசோதிக்கப்பெற்று, அவரவர்கட்கு ஏற்ற பெற்றியான உத்தியோகங்களைக் கொடுத்தும் மாற்றியும் தள்ளியும் அரசாட்சிமுறையிலேயே சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன. வெகுநாட்களாக விசாரிக்கப்படாமலிருந்த பல கேள்விகளும் விசாரிக்கப்பட்டன. பல கிராமங்களின் சிக்கன ஏற்பாடுகளும் நன்றாகக் கவனிக்கப்பட்டு அந்தந்தக் கிராமங்களில் ஆகவேண்டிய விருத்தியம்சங்களும் ஏற்படுத்தப்பெற்றன.

கிராம ஆட்சிமுறையில் ஏற்பட்டுள்ள ஒரு அவசியமான விஷயம், இங்குக் குறிக்கப்பெறவேண்டுவதே. இது இம்மாகாணத்துக்கே ஒரு நல்ல சீர்திருத்தமுமாகும். அதாவது, "கிராம மிராசுதார்கட்கென் றேற்படுத்தப்பெற்ற போதனை சங்கமே" யாம். இந்த மிராசுதார்கள், அதிகாரிகட்கும் குடித்தனக்காரர்கட்கும் இடையில்

நின்று ஆட்சிமுறையின் அவசியகத்தை எடுத்து நன்றாக விவரித்துச் சொல்லி, கிராம ஆட்சிமுறைச் சீர்திருத்தத்தில் உதவிபுரியத் தகுதியுடையவர்களாக இருக்கிறார்கள். இதற்காக அவர்கள் அரசாங்கத்திலிருந்து யாதும் கைம்மாறாகப் பெறுவதில்லை, ஆனால், ஒரு ஏகர் நன்செயாவது மூன்று ஏகர் புன்செயாவது மிராசம்பலம் என்று பெயருடைய ஒரு இனாம் பூமியையனுபவிக்கத் தகுதியுடையவராக ஆகிறார். ஒவ்வொரு கிராமத்திலும் இத்தகைய மிராசுதார்கள் இருவர் அல்லது மூவர் இருப்பார். இத்தகைய மிராசுதார்கள் தக்க செல்வவான்களாகவும் பாரம்பரியமான செல்வாக்குடையவர்களாகவுமே இருப்பார்கள். பல சமயங்களில், கிராம கபர்களால் வசூலிக்கப்பெறும் கிஸ்திப்பணங்களும் இத்தகைய மிராசுதாரர்களிடம் ஒப்புவிக்கப்படுவதுமுண்டு. இவர்கள் கிராம வழக்குகளை ஒழுங்குபடுத்தியும் கலகங்களையடக்கியும் கிராமாதிபதிக்கு வசூலில் துணைசெய்வதும் உண்டு. குடித்தனக்காரர்கள் கிராமாதிகாரியிடமுள்ள வணக்கத்தைக்காட்டிலும் இந்த மிராசுதாரர்களிடத்தில் அதிக வணக்கம் காட்டுவார்கள். வண்ணான் முதலிய கிராமத் தொழிலாளிகளும், போலிஸ்காரனிடத்திலிருப்பதைக்காட்டிலும் இவர்களிடத்தில் அதிகம் பயந்தவர்களாக இருப்பார்கள். இந்த மிராசுதார்கள், தங்களுக்குண்டாயிருக்கும் செல்வமிகுதியினாலும் செல்வாக்குமிகுதியினாலும் தர்பார் அவர்கட்கும் குடித்தனக்காரர்கட்கும் தகுந்த ஒற்றுமையையும் பரஸ்பர பிரியத்தையும் உண்டுபண்ணி, கிராம ஆட்சிமுறையை அதிக சுலபமாக்கிக்கொடுத்துக் கிராமாதிகாரிகட்கு எப்போதும் தக்க உபகாரிகளாக விளங்கிக்கொண்டிருப்பார்கள்.

பத்திராதிபர்.

இந்தியாவும் ஜர்மானிய யுத்தமும்

(இந்திய சம்பந்தம்)

—:( ):—

விக்டோரியா மகாராணியின் இந்துஜன ஸர்வஸம்மத ஒப்பந்தத்திற்குப்பின் உலகமெங்கும் யுத்தம் அற்று இருந்தது; பொறுமை உற்றுவந்தது; சமாதானம் மேவிட்டு நின்றது; இங்கிலாந்தின் வெற்றிக்கொடி தடங்கலின்றித் திசையெங்கும் திகழ்ந்துலவினது. மற்றும், சுயநயமே பெரிதென்ற ஸ்வரூபம் உண்டாயிற்று. தன் வயிற்றையே தடவிப்பார்த்துக்கொள்ளும் பெருந்தன்மை பெருகிற்று. பணத்தைச் சேர்க்கும் வழியிற் புத்தியைச் செலுத்தும் மாயாவாதமே வலுவைப்பெற்றது. பாழான மனமும் சுகமான குடியைத் தேடினது. நிலையிலாத் தேகமும் நித்திராதேவியைத் தியானித்தது. ஓர்மையிலா இந்திரியமும் மாதர்பாலோடியது. சுருக்கிச்சொல்ல, பலர் கண்ணுறங்கினர். ஆகவே, உலகெலாம் உறங்குவதாகவே தம் மனதில் எண்ணிக்கொண்டனர். யுத்தம் என்பது மறுபடியும் உலகத்திலுண்டோ என்று அவரெண்ணினர். தம்மிலும் சிறந்த வீரியர் விண்ணுலகிலும் உண்டோ எனப் பலர் இறுமாந்தனர். தனதுபலந் தெரியாத தேனீக்கே அவர் ஒப்பாயினர். இன்னும் நல்லவர் மனது புண்பட்டது. வைதீக உடல் வாடியது. சுயபாஷைச் சுவையும் குறைந்தது. கவித்துவம் மெலிந்தது. பணத்திற்கும் பலம் உண்டாயிற்று. வாயரட்டைக்கு வலிமை வந்தது. வெள்ளைத் தோலுக்கு சுவதந்தரம் கொடுக்கப்பட்டது. கறுப்பு மணிகளுக்கு அநாகரிகக் குழிகள் என்ற பட்டப்பெயர் கிடைத்தது. இந்நிலையும் அற்றே வளர்ந்தது.

இச்சமயம் ஜர்மானியர்கள் பெல்ஜியத்தின் வழி வந்தார்கள். அன்னவர்வரவை பெல்ஜியர்கள் மறுத்தனர். இருகட்சிக்கும் சண்டை உண்டாயிற்று. பிரெஞ்சுக்காரர்கள் பெல்ஜியர்க்கு உதவி செய்ய ஆரம்பித்தனர். பிரான்ஸ் தேசத்திற்கே மோசம் வந்துவிடும்போலிருந்

தது. ஆண்மையுற்ற ஆங்கிலோவீரர்கள் தம் கருணைமேலீட்டால் பிரான்ஸுக்கு உதவிசெய்ய ஒப்புக்கொண்டனர். ஆகவே, இப்பொழுது யுத்தமோ, ஆங்கிலேயர்க்கும் ஜர்மானியர்க்கும் நடந்துகொண்டிருக்கிறது.

இந்த யுத்தத்திற்கும் இந்தியாவிற்கும் உள்ள ஸம்பந்தமென்ன? தனது சுயஆட்சியையே விட்டுவிட்டுத் தியங்கியிருக்கும் இந்தியாவிற்கும் இச்சண்டைக்கும் உள்ள உரிமை என்ன? இராமாயண பாரதயுத்தங்களைக் கண்ணுரைக்கண்டுள்ள இந்தியா இதையும் பார்க்கச் சொக்கிய பார்வையின் நோக்கமென்ன? தனதுயிரையும் துறந்து வெளிச்செல்லும் ஒப்பிலா வீரத்தை இத்தேசம் பெற்றதன் தற்சமய இனியகாரணம் யாது? எவ்வளவோ உழைத்துச் சேர்த்துவைத்த தனது திரவியத்தை இந்தச்சண்டைக்கெனக் குவியல் குவியலாகக் கொட்டி, ஒருவெள்ளி ரூபாய்க்குப்பதில் ஒரு கடுதாசி ரூபாயைப் பெறக்கூடிய உபகாரத்திற் சிந்தனையை இதுசெலுத்தியதின் செவ்வையான மூல மென்னே? ஜயம் எந்தக் கட்சிக்கோ என்ற ஐயத்தை இச்சமயம் இது பெற்றிருக்கும் புதிய நிலைமையின் புஷ்கள அடிப்பாரம் யாது? என்று கவனிப்போம்.

இப்பொழுது நடக்கும் இந்தயுத்தத்தில் ஜர்மானிய ஆங்கிலோ ஸம்பந்தம் எவ்வளவு பிரகாசிக்கிறதோ அவ்வளவைக் காட்டிலும் அதிகமே தன்னுடைய ஸம்பந்தம் என்ற விஷயம் இந்தியாவிற்குத் தெரியும். "தனக்கு எவ்வளவு கஷ்டம் உண்டானாலும் உண்டாகட்டும். பிறருடைய கஷ்டத்தை எவ்வழியிலேனும் நிவர்த்திசெய்யப் பிரயத்தனிப்போம்." என்ற ஸ்திரமான எண்ணத்தையே உரிமையாகக்கொண்டு தனது உரிமையை இழந்திருந்தும் உத்தமோத்தமமான ஓர் உரிமையை முன்னிட்டு இந்தியா இதில் நுழைந்தது. பக்ஷபாதம் என்ற பழிக்காளாகலாகாது என்ற எண்ணத்தாலோ, பழைய யுத்தத்திற்கும் நவீனச் சண்டைக்கும் உள்ளவித்தியாசத்தைத் தெரிந்துகொள்ளவேண்டுமென்ற தேவையாலோ, தயவுள்ள ஆங்கிலோ அரசாட்சிக்குக்கீழ் உள்ள தனது தரிசன விசேஷத்தால் யுத்தத்தின்

முடிவைத் தனது குறிப்பில் நிலைநிறுத்தவோ, ஆங்கிலேயர்க்குத் தொண்டு புரியவேண்டுமென்ற ஆசையாலோ, இந்தியா தனது பார்வையாற் சற்றே யுத்தகளத்தைச் சொக்கச்செய்தது. உயிரைத் துறந்தேனும் ஸ்வய ஆதீனத்தில் விளையாடுவதே உத்தமம் என்ற விதியை மற்றவர்க்குக் கற்பிக்கவோ, உடல் பொருளாவி மூன்றையும் முற்றுந்துறந்த ஞானத்தலைவர்தம் வெளிவருகையை அறிகுறியெனக்காட்டவோ, எதைத் துறந்தேனும் துல்லிய குறியைப் பெறுவதே தனது குணம் என்ற ஒப்பிலாவீரத்தை இத்தேசம் பெற்றது. நவீனநாகரிகத்தின் ஓட்டம் எவ்வளவு என்பதை ஆழம்பார்க்கவோ, அல்லது தந்ததை மறுபடியும் வட்டியுடன் பெறலாமென்ற சீலத்தாலோ, இத்தேயம் தனது செல்வத்தைக்கொட்டியது.

நிற்க, இந்தியாவுக்கு ஜயம் எந்தக்கட்சிக்கு என்ற ஐயம் இல்லை; எந்தக்கட்சிக்கோ என்ற பிரமை உண்டு; எள்ளளவேனும் எவ்வகையிலேனும் பிறருக்கு இட்டுஉண்ணும் ஐயம் இப்பொழுதும் உண்டு.

தனக்கு வேண்டியவர்கள் என்றன்று, தனது தேசபரிபாலனர் என்றன்று, பிறர் பார்த்துப் போற்றும் பெருமைக்குமன்று, தனக்கேதெரியாத அறியாமையாலுமன்று, அல்லது, தனக்குப் பிரதிப்பிரயோசனமாகச் சுயஆட்சியைக் கருதியுமன்று, ஆனால் பரோபகாரம் என்ற ஓர் உத்தமமான உரிமையை முன்னிட்டே இந்தியா இந்த யுத்தத்தில் ஸம்பந்தப்பட்டிருக்கிறது என்பதன்றோ நமது வித்யாபாநுவின் விளக்கமான அபிப்பிராயம். "நீங்கள் சுயஆட்சியை அனுக்கிரகிக்க ஒப்புக்கொண்டால் நாங்கள் இந்தயுத்தத்தில் உங்களுக்கு வேண்டிய உதவியைச் செய்கிறோம்." என்று உண்மை இந்தியர் ஒருவருஞ்சொல்லார். ஆட்சியை ஆதரித்தால் விரும்பும் பணத்தைக்கொடுப்போம் என்று இந்தியா இளிக்காது. ஆட்சிஆதரிக்கப்பட்டாலும் ஆதரிக்கப்படாவிட்டாலும், இஷ்டமிருந்தால், இந்தியா பணமுட்டைகளை இடும்; இல்லாவிட்டால் மௌனநிட்டையில் அமர்ந்துவிடும். என்றகருத்து எல்லோருக்கும் தெரிந்ததே.

ஏனெனில், எத்தனையோ சக்கரவர்த்திகளைப் பார்த்திருக்கிறது. இத்தேசம். எத்தனையோ மாயாவீரர்களை மயக்கியிருக்கிறது இந்நாடு. எத்தனையோ உபாயவஞ்சக தந்திரர்களை அனுபவித்திருக்கிறது இச்சுதேசம். இதன்உயர்வுக்கு ஒப்புஇல்லை. இதின் பெருந்தன்மை எட்டிலடங்காது. இத்தகைய இதன் கம்பீரம் சுய ஆட்சி என்றபலனுக்கென ஒரு உதவியைச் செய்ய ஒப்புக்கொள்ளுகிறதென்று எவ்வளவு ஆர்ப்பரித்துச் சொன்னாலும் நம்பஇடமில்லை. எதிர்காலத்தையும் தெரிந்துள்ள ஞானிகளைப் பெற்றிருக்கும் இத்தேசம் சொல்லிக்கேட்காமலே, காமியமாய் வேண்டாமலே, நிஷ்காமியமாய் எக்காரியத்தையும் சாதித்துக்கொள்ளும் தன்மையைக்கொண்டிருப்பது நவீனநடனர்க்கும் நன்றாகத்தெரிந்தவிஷயமே. இதற்குத் தக்க அத்தாட்சி பாரதயுத்தத்தையும் பகவத்கீதா ஞானஸாரத்தையும் தவிர வேறு வேண்டியதில்லை.

ஆகையால், இந்தயுத்தத்தில் இந்தியா நிஷ்காமியஸம்பந்தத்தையே பெற்றிருக்கிறது; அதனுடன் பரோபகாரத்தையும் மேற்கொண்டிருக்கிறது.

ஆனால் இந்தியாவின் கடமைகளிற் பலவற்றைச் சாதிக்காது இன்னும் ஆங்கிலேயர்கள் இருக்கின்றனர் என்பது உண்மையெனநாமும் உணர்கிறோம். உரியவேலையைச் செய்யவேண்டியது உத்தம அரசாட்சியின் கடமை. சம்பிரமமாகச் சாதித்துக்கொள்ளும் சாமரியம் சத்தியமுள்ள இந்தியர்களைச் சார்ந்திருக்கிறது. ஈசன்விடும் நடுவழியே நாம் பின் தொடரும் திருவொளியெனக் கருத்திலுற்றுக் கருணையுடன் கனவேகமாய் வேலைசெய்வோம்.

டி. வி. வெங்கடராகவலு, உபாத்தியாயர்,

மாடல்செக்ஷன்,

புதுக்கோட்டை,

188

உ

மதுரைநகர்வாசியும் அருந்தமிழ்ப்புலவருமாகிய ஸ்ரீ மு. ரா:

கந்தசாமிக்கவிராய ரவர்கள்மீது இரங்கற்பாக்கள்.

கோச்சகக்கலிப்பா.

சந்தமொடு தென்றல் தவழ்ந்து மணங்கமழும்
சந்தமுறு நாடெங்குந் தண்டமிழ்ப்பா வின்னறிய
கந்தம் பரப்புசீர்க் கந்தசாமிப் புலவோய்
வெந்தறிஞர் மாழ்க விடுத்தாய் தமிழகமே.
வெறும் புலவர்வீற விடுத்தாய் தமிழகமே. (௧)

முன்னூற் கலைவாழ் முகவூர் முதுகுடியில்
தன்னேரி லாராம சாமிகவி ராயனருள்
சொன்னாப் புலமைச் சுதர்மூவர் பாவலருள்
பின்னாகத் தோன்றியவா முன்னாப் பிரிந்தனையே!!
பிறங்குசீர் முன்னவ ஆ!! முன்னாப் பிரிந்தனையே. (௨)

செந்தமிழ்ச் சீரெல்லாம் செழிக்கநீ செய்தளித்த
சந்தமிகு வண்மைக் குமண சரித்திரத்தோடு—
அந்தமில்சீர் அங்கயற்கண் ணம்மைகலிப் பாமுதலா
நந்தலிலா நூலிலகிந் நாடுதுறத்தல் நன்றோ?
நாவல்லோர் ஏங்கவுமிந் நாடு துறத்தல் நன்றோ? (௩)

தமிழுலகம் போற்றிசெயச் சந்தநயஞ் சேர்ந்தொளிர்சொல்
அமிழ்தாம் திருப்புகழ்நூ லாய்ந்துபதிப் பித்தாய்;
தமை நிகரில் ஆன்றோர் தனிச்செய்யுள் சேர்த்தே
அமைவுறச்சிந் தாமணியொன் றாக்கினாப் வாக்கினியாய்!
அன்றியும் பன்னூலும் ஆக்கினாப் வாக்கினியாய்! (௪)

செய்யுட் பெருமையொன்றே செப்புவதன் செய்திறமா
ஐய கம்பரா மாயணத்தார ணியகாண்ட
மையகலும் ஓர் உரைநூல்வகுத் தளித்தாய் வியாசமுறு

செய்ய திரட்டா நூலும் செய்தளித்தாய் மெய்தெளித்தோய்!
செந்தமிழின் நற்பணியே செய்தளித்தாய் மெய்தெளித்தோய்! (ரு)

உலகியலா ராய்ச்சியின் உறுபயனைச் சீராரும்
புலவோர் பொதுஅறிவு பூண்டொளிர வேண்டுமென்றே
பலஆண் டுவிவேக பானுவித்யா பானுவென
நிலவுமிரு பத்திரிகை நீயே நடாத்தினையே
நீணிலத்தோர் பாராட்ட நீயே நடாத்தினையே. (சு)

பாண்டித்துரை முதற்பல் பார்த்திபர்நற் சுட்டும்சீர்
ஈண்டும் மஹாமஹோபாத் யாயர்முதல் நேயர்நட்பும்
மாண்டக்க சோதரர்கள் மைந்தருறவும் விடுத்து
யாண்டைக்கோ புக்கொளித்தாய் யாணர்ச்சீர்ப் பாவாண!
யாழிசையிற் பாப் புனையும் யாணர்ச்சீர்ப் பாவாண! (எ)

நேய சதி பதிகள் நேருமுடல் வேறெனினும்
ஏயு முயிரொன்றுவ ரென்னுமிவ் வுண்மையெங்கும்
மாய நிறை வாழ்வுகக்கும் மன்பதையோர் தேருதற்கோ
நீயகன்றாய் தாழாது நின்றுணைவி சென்றாங்கே?
நிலவு புகழ் நிறுத்தி நின்றுணைவி சென்றாங்கே? (அ)

முன்னவனே முன்னின்றாலென்றும் "முடிப்பன முன்
சொன்ன படியே துசக்கட்டி" யென்றும் நீ
என்னைப் புகழ்ந் தூக்கும் இன்னுரைகண் முன்னிற்க
உன் னுருவம் நீத்தாய் உரைசேர் கவியரசே
உத்தம நட்பாளர் உரைசேர் கவியரசே. (கூ)

சேற்றூர்ச் சமஸ்தானச் சீரார் புலவனென
விற்றிருந்தான் உந்தை வியனுலகில் அவ்வூர்போல்
சாற்றூர் எனைத்திடத்தும் சமஸ்தான முற்றவற்கு
மேற்றாந் தாமுற்றாய் விளங்குகநின் விரிபுகழே
மேதகுசீர்க் கவிராய! விளங்குகநின் விரிபுகழே; (௰)

நேரிசை வெண்பா.

நங்கந்த சாமிகவி ராயன் சிவனடிக்கண்
பிங்கள ஆண்டிற் பெயர்மீனத்—திங்கள்வெண்
பக்கத்து ஞாயிறுநாள் பஞ்சமியிற் கார்த்திகைமீன்
புக்கநாட் புக்கான் புரிந்து.

வே. முத்துஸாமிஐயன்,
எம். ஏ. எல். டி.
மதுரை.

உ

சபைநிகழ்ச்சிக் குறிப்புகள்.

கோநகர் ஞானசம்பந்த நற்சபையின் ஆறாம் வருடபூர்த்திக் கொண்டாட்டம்.

:()():

பரமகருணாநிதியாகிய இறைவன் திருவருளை முன்னிட்டு இந்நகர் ஞானசம்பந்த நற்சபையின் ஆறாம்வருஷபூர்த்திக்கொண்டாட்டம் நிகழும் காளயுக்தி வருஷம் வைகாசி மாதம் ௨௨, ௨௩-ந்தேதிகளில் (1918-ம் வருஷம் ஜூன் மாதம் 4, 5, ந்-தேதி) செவ்வனே நடைபெற்றது. அவ்விருதினங்களிலும் உள்ளூரிலும் வெளியூர்களிலும் இருந்து பலநகரவைசிய கனவான்களும் வக்கீல்களும், உபாத்தியாயர்களும், பிறரும் வந்து சபையைச் சிறப்பித்தார்கள். 22-ந்தேதி மாலை 3-30 மணிக்குப் புதுக்கோட்டைச் சமஸ்தானம் திவான்பேஷ்கார் பிரும்மஸ்ரீ B. V. காமேஸ்வரையர், எம். ஏ அக்கிராசனம்வகிக்க அவரை நகரத்தார்களும் பிறரும் மேளதாளத்துடன் வரவேற்றுக் கடவுள்வாழ்த்துக்கூற இந்நகர் ஸ்ரீ அ. நா. சுப்பிரமணியன் செட்டியார் நகரத்தார்களின் பிரதிநிதியாக வந்தோபசாரபத்திரத்தை ஸமர்ப்பித்தனர். பின்னர்க்கற்பக விநாயகக்கலாசாலை உதவியுபாத்தியாயர் ஸ்ரீ இராமசாமி ஐயங்கார் கலாசாலை ஞானசம்பந்தநற்சபை வாணீமந்திர புத்தகசாலை என்னும் இவற்றின் அபிவிருத்தியையும் பிறவற்றையும் விளக்கும் அறிக்கைப்பத்திரத்தை வாசித்தார். அதன்பின் அக்கிராசனர் முடிவுரை கூறிக் கற்பகவிநாயகக்கலாசாலை மாணவர்களில்

முதற்றரத்திற் றேறியவர்களுக்குப் பரிசுவழங்கினர். பின்னர் மதுரைவித்துவான் ஸ்ரீமா. சுந்தரேசுவரஐயர் அவர்கள் திருவிசைப்பா என்ற விஷயத்தைத் தமக்கு இயற்கையாயமைந்த இனிய சாரீரத்துடன் உபந்நியாசஞ்செய்தது சபையை மகிழ்வித்தது. இதன்பின் கற்பகவிநாயககலாசாலை மாணவர் த. காசிவி. சிதம்பரம் என்பவரால் ஆலயவழிபாடு என்ற சம்பாஷணையும் ராமசாமி என்பவனால் இளமையிற்கல் என்ற உபந்நியாசமும், சு. மு. பழனியப்பனால் ஆங்கிலத்தில் தூய்மை என்ற உபந்நியாசமும், முரு. பிச்சப்பனால் சூதுவிரும்பேல் என்ற உபந்யாசமும், புதுக்கோட்டை மகாராஜ காலேஜ் முக்கியபோதகர் ஸ்ரீ என் தியாகராஜ ஐயர் எம்' எ, எல். டி. யால் தொழிற் கல்வி என்ற உபந்நியாசமும், சிதம்பரம் நாராயணகனபடிகளால் ஆகமமும் வேதமும் என்ற உபந்நியாசமும் நன்குநடைபெற்றன. பிறகு அக்கிராசனர் இவற்றைப்பற்றி மிக அழகாக முடிவுரை கூறினர். இத்தகைய சிறப்போடு இரவு 9-மணிக்குச் சபைபூர்த்தியாயிற்று. மறுதினமாகிய 23-ந்தேதி ஸ்ரீ B. V. காமேசுவரையர் அவர்கள் கார்யாந்தரமாய் அவசியம் புதுக்கோட்டைக்குப் போகநேரிட்டபடியால் தமக்குப்பிரதிநிதியாய் அக்கிராசனம்வகித்துச் சபையை நடத்தும்படி புதுக்கோட்டை வித்தியா இலாகா தலைவர் ஸ்ரீ சி. நாராயணசாமி ஐயர் பி. எ. யை அனுப்பினர் 23-ந்தேதி சாலை 9-மணிக்கு ஸ்ரீ சி. நாராயணசாமிஐயர் அக்கிராசனம் வகிக்கச் சபைதொடங்கப்பெற்றது. முதலில் க. வி. க. மாணவர் முரு சிதம்பரமும் வயி. வயித்தியநாதனும் தேசியக்கல்வி என்ற விஷயத்தைப்பற்றி ஆங்கிலத்திற் சம்பாஷித்தார்கள். பின்னர் வித்தியாபாநுப்பத்திராதிபரும் கம்பராமாயணப்பிரசாரகருமாகிய வித்வான் ஸ்ரீ எம் வி. கோவிந்தராஜஐயங்கார் அவர்கள் தேசியக்கல்வி என்ற விஷயத்தையே எடுத்துக்கொண்டு அதனால்கிடைக்கக்கூடிய பயனையும் அதைஎவ்வளவு அவசியமாய் நாம்கைப்பற்றவேண்டும் என்பதையும், தேசியக்கல்வி என்றதின்பொருளையும் நன்குவிளக்கி உபந்நியசித்தார்கள். அதன்பின் க. வி. க மாணவி அ. லெ. சிவகாமி காரைக்காலம்மையார் சரித்திரத்தையும் சென்னை ஹைகோர்ட்வக்கீல் ஸ்ரீ இராமையா பி. ஏ. பி. எல். அவர்கள் பெண்கல்விஎன்ற விஷயத்தையும் நன்கு உபந்யசித்தார்கள். பின்னர் க. வி. க. மாணவர் அ. சுப்பிரமணியனும், சா. சாமிநாதனும் செல்வச்செருக்கைப்பற்றிச் சம்பாஷித்தார்கள். பிறகு கண்டனூர் ஸ்ரீ தெ. அரு. சித. இராமநாதன்செட்டியார் அன்னையும் பிதாவும் முன்னறிதெய்வம் என்றவிஷயத்தை எடுத்துக்கொண்டு கம்பராமாயணம், பாரதம் முதலியவற்றினின்றும் மேற்கோள்காட்டிச் செவ்விய சொற்களால் உபந்நியசித்தார். பிறகு க. வி. க. மாணவன் தி. சோமசுந்தரம் என்பவன்

கல்விச்செருக்கு என்ற விஷயத்தை உபந்நியசித்தான். பின்னர் அக்கிராசனாதிபதி ஒவ்வொரு விஷயத்திற்கும் ஏற்றவாறு சிறந்ததொரு முடிவுரை கூற முற்பகற்சபை நிறைவேறிற்று.

பிறகு பகல் 3 மணி முதல் 5½ மணிவரைபலவான்குடி ஸ்ரீ ராம, கு. ராம. ராமசாமிச்செட்டியார் அக்கிராசனம் வகிக்க நாட்டுக்கோட்டை நகரவைசியர்களின் கான்பரன்ஸ் நடைபெற்றது. அதில் கண்டனூர் ஸ்ரீ தெ. அரு. சித இராமநாதன்செட்டியார் முதலியவர்கள் புராதன முறைகளிலும் நீதிகளிலும் உள்ள நயங்களை எடுத்து நன்கு விளக்கி அதன்படி நடக்கவேண்டுமென்று நகரத்தார்களைக் கேட்டுக்கொண்டார்கள். இவர்கள் கேட்டுக்கொண்டபடியே நகரத்தார்கள் நடப்பார்களென்று நம்புகிறோம். பிறகு பிற்பகலில் நடைபெற வேண்டியவைகளான பொறுமை, கண்ணகிசரித்திரம், செய்ந்நன்றியறிதல், பெரியோரியல்பு, சமயஞானம் என்ற விஷயங்கள் மாலை 6 மணிக்குமேல் ஸ்ரீ சி. நாராயணசாமிஐயர் தலைமை வகிக்க, முறையே க. வி. க. மாணவன், சு. மு பழனியப்பனாலும், ஷெ மாணவி சொ வள்ளியம்மையாலும் பலவான்குடி சித்திவிநாயகவித்தியாசாலைத் தலைமைத்தமிழாசிரியர் ஸ்ரீ. குமாரவீரையாவர்களாலும் க. வி. க. மாணவன் இராமசாமியாலும் நன்கு உபந்யசிக்கப்பெற்றன. பின்னர் அக்கிராசனரவர்கள் ஒவ்வொருவிஷயத்துக்கும் தக்கவாறு அபிப்பிராயமும் முடிவுரையுங்கூறிச் சபையை மகிழ்வித்தார்கள். அக்கிராசனருக்கும்உபந்யசித்தோர்க்கும், விஜயஞ்செய்துசிரவணஞ்செய்தோர்க்கும், சொக்கலிங்கம்புதூர் மாணிக்கவாசகவித்தியாசாலைத் தலைமையாசிரியர் ஸ்ரீ ரெ. இராமமூர்த்திஐயரவர்கள் வந்தனோபசாரங்கூறி ஹாரசந்தன தாம்பூலாதிகள் வழங்க இரவு 9-மணிக்குச் சபை சிறப்பாய் நிறைவேறிற்று.

இவ்விருதினங்களிலும் மதுரைவித்துவான் ஸ்ரீ நா. சுந்தரேசுவரஐயரவர்களால் தேவாரதி. அருட்பாக்கள் இடையிடையே இன்னிசையுடன் ஓதப்பெற்றன. இங்ஙனம் இச்சபை நீடூழிவாழ இறைவன் திருவருள்பாலிப்பாராக.

சம்பந்தன்:

கம்பர் திருநக்ஷத்திரத் திருவிழா.

நாட்டரசன்கோட்டை.

நாட்டரசன்கோட்டை நகரத்தார்களால் நடத்தப்பெறும் வித்தியாபரிபாலன சங்கத்துக்கம்பர்கலாசாலையில் நிகழும் காளயுக்திஞு சித்திரைமீ௳ (19-4-18) வெள்ளிக்கிழமை கம்பர்திருநக்ஷத்திரத்திருவிழா நடைபெற்றது. காலை 7 மணி

தொடங்கி ஊர்வலத்திருவுலா. அக்கிராசனாதிபதி மதுரைவக்கீல்பிரம்மஸ்ரீ D சுந்தரராஜ ஐயங்கார் அவர்கள், கனதனவான்களாகிய நகரத்தார்கள் வித்துவான்கள், கலாசாலை மாணவர்கள், மற்றும் அநேக அன்பர்கள் புடைசூழக் கோயில் விருதுகள் முன்விளங்க மேளவாத்தியங்கள் முழங்கப் பல்லக்கில்வைத்து ஸ்ரீராமர் திருவுருவப்படமும் கம்பராமாயணப் பெருங்காப்பியத் திருவேடும் அபிடேகச்சந்தன வெள்ளிக்கும்பமும் எழுந்தருள ஸ்ரீ கண்ணுடையநாயகி சந்நிதியினின்று திருவுலாப்போந்து கம்பர் அடங்கியுள்ள சமாதிக்கோயிலில் அபிடேக ஆராதனைகள் நிறைவேறியபின் கலாசாலை மாணவர்களும் வித்துவான்களும்முறையே திருவாய்மொழி இராமாயணப்பாசுரங்களும் கம்பர்க்குத் தோத்திரப்பாக்களும்பாடினார்கள். அத்தருணம் அங்குவந்திருந்தோரனைவர்க்கும் க. ணா. ஆ. வி. அருணாசலஞ்செட்டியார் அவர்கள் உபசாரம் செய்தனர். பின் 11மணி தொடங்கிக் கம்பர் கலாசாலையிற் சுமார் 200 ஏழைகளுக்கு அன்னம் அளிக்கப்பட்டது, மாலை 3 மணி தொடங்கிச் சிற்றுண்டிவிநியோகம் செய்யப்பட்டபின் மகாஜனக்கூட்டம் நடைபெற்றது. மிகுந்த அபிமானமும் அன்புங்கொண்டு தகுதிவாய்ந்த நகரத்தார்களுட் பலரும் ஏனை அன்பர்கள் அநேகருமாகச் சுமார் 300 பேர்கள் வந்துகூடியிருந்தனர் முன்கண்டபடி மதுரைவக்கீல் பிரம்மஸ்ரீ D சுந்தரராஜஐயங்கார் அவர்கள் அக்கிராசனத்தில் அமர்ந்தனர் முறைப்படி கடவுள்வழிபாட்டுடன் சபை தொடங்கியது உபந்நியாசகராகக் கம்பர்கலாசாலைத்தலைமையாசிரியர் உரத்தூர் கோ வைத்தியலிங்கம் பிள்ளை எழுந்துநின்று கம்பர்வரலாறும் அவர்க்குத் திருவிழாவேண்டியவாறும் அவர்செய்துள்ள இராமாயணப் பெருங்காப்பியத் திட்பநுட்ப ஆராய்ச்சியும் எடுத்து விளக்கிப்பேசினர்.

"கல்வியிற்பெரியன் கம்பன்," "கவிச்சக்கரவர்த்திகம்பர்" "கம்பநாட்டாழ்வார்," என்றின்ன சிறப்புப்பெயர்களால் எல்லோராலும் வழங்கப் பெறுபவர் கம்பர், அறம் பொருள் இன்பம் வீடு என்னும் உறுதிப்பொருள்களை யமைத்து, உலகியலைச் செவ்வனே உணர்த்திச், கவித்திறனெல்லாம் அமையக் காட்டிச், செந்தமிழ்ச்சுவையையூட்டி, அத்தமிழ்க்கோர் அணிகலமாய் இராமாயணப்பெருங்காப்பியத்தை நமக்குத்தந்தருளியவர் கம்பர், அப்பெருஞ்செய்தி கருதி அவர்க்குத் திருவிழாநடத்தவேண்டுவது தமிழ்மக்களாயினாரெல்லோர்க்கும பெருங்கடனேயாகும். அம்முறைபற்றியும் கம்பர்கலாசாலை என்னும் பெயருக்கேற்பவும் "காட்டெருமைமேய்க்கின்ற காளையர்க்கோ நம்தோற்றோ நாட்டரசன்கோட்டை நகர்க்கு" எனக்கூறிக் கம்பர்புகழ்ந்த திருநகர் நாட்டரசன் கோட்டையாதலாலும் இக்கலாசாலையில் இத்திருவிழா நடத்தியது மிகப்பொருத்தமும் அவசியமுமாகும். கம்பரது பிறப்பிறப்புக்களை யுணர்ந்துகொள்ள

194

எழுத்து மூலமான ஆராய்ச்சி கிடைத்திலது. அவரை நாம் உணர்ந்துகொள்ளக் கருவியாயும் அவரது திறனெல்லாம் அமைந்து அவரது வடிவாய் விளங்குவதாயுமுள்ளது இராமாயணமே, அவ்விராமாயணத்துக்கு வாச்சியப் பொருளாயுள்ளவர் ஸ்ரீராமபிரானே. அவரது ஜெனன தினத்தையே கம்பரது திருநாளாகக் கொள்ளுதல் ஒக்கும் எனக்கொண்டு ஸ்ரீராமநவமியையே கம்பர் திருநக்ஷத்திரமாக்கியது எல்லோருக்கும் உடன்பாடாகுமென்றே நினைக்கிறேன் என்று கூறினர். பின் பண்டிதர் கணபதியாபிள்ளையவர்கள் இராமலிங்கம்பிள்ளையவர்கள் சீதாராம ஐயங்காரவர்கள் வெள்ளைவாரணம் பிள்ளையவர்கள் வக்கீல் இலட்சுமண ஐயங்காரவர்கள் முதலியோர் கம்பர்திருவிழாவில் தாம் தாம் கொண்ட கருத்தைவிளக்கி உபந்நியாசித்தார்கள். முடிவில் அக்கிராசனாதிபதியவர்கள் மிகவணக்கத்துடன் கம்பரைக்குறித்தும் அவர்பேரால் வழங்கும் கலாசாலையைக்குறித்தும் விரிவாய்ப்பேசினர் பின் முறைப்படி சந்தனதாம்பூல விநியோகங்களுடன் சபை நிறைவேறியது. இதையே முதலாகவும் வழிகாட்டியாகவும் கொண்டு தமிழ்வழங்கும் எல்லாநிலங்களினுமுள்ள எல்லாத்தமிழ்மக்களும் வருடந்தோறும் சித்திரை மாதத்து ஸ்ரீராமநவமியில் கம்பரது திருவிழாவை நடத்தி அவர் நமக்குச் செய்துள்ள நன்றிக்காக அவரை நினைந்து வழி படலால் பெருஞ்சிறப்பும் பெருநலனும் பெரும்பேறு மெய்துமெனல் சரதம். சரியான ஆதரவுடன் ஸ்ரீராமநவமியையேயன்றிக் கம்பரது பிறப்பிறப்புக்களின் ஆராய்ச்சி கிடைக்கப்பெறின் அவ்வாறு அவர் திருவிழாவை நடத்தலு மிழுக்காது. எவ்வாற்றானும் செந்தமிழருமையும் அத்தமிழன்பும் வாய்ந்த கம்பரது திருநக்ஷத்திரத்தை ஔதாரியமாய்ச்செய்து சிறந்தநாட்டரசன்கோட்டை நகரத்தார் போல எனைஎல்லாத் தமிழ்ப்பெருமக்களும் கம்பர்திருநாளாகிய இப்பெருநலத் திருப்பணியை இனிது நடத்துதல் சிறப்புடைத்தாம்.

இங்ஙனம்,

கோ வைத்தியலிங்கன்,

கம்பர் கலாசாலைத் தலைமையாசிரியர்.